RECEIVED
1978-2-24
PERIODICALS
DIVISION
LIBRARY

விலை சதம் 50 ★ பக்கங்கள்—8

"சிவராத்திரி விரதம்"

10 மில்க்வைற் நீல சோப் அல்லது 2 பார்சோப் அல்லது 2 நீம்சோப் அல்லது 2மெடிக் கேட்டட் சோப் அல்லது 2 சலவைப்பவுடர் மேலுறைகளை அனுப்பி மேற்படி சிறந்த நூலைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**மில்க்வைற்**

**யாழ்ப்பாணம்.**

**ஈழநாடு**
**வார மலர்**
THE EELANAADU VAARAMALAR

### செம்மணி கொலைவழக்கு: ஏப்.5-ல் விசாரணை

(யாழ்ப்பாணம்)

செம்மணி துப்பாக்கிச் சூட்டுக் கொலைவழக்கு வவுனியா மேல் நீதிமன்றத்தில் ஏப்ரல் 5ம் தேதி ஆரம்பமாகும்

இவ்வழக்கு வவுனியா மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம் எம் அப்துல் காதர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, ஏப்ரல் 5ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது

மலர் 20 | மாசி 7 | ரபி: அவ் 10 | ஞாயிற்றுக்கிழமை | [19—2—78] | இதழ் 9

# 'தமிழர்களையெல்லாம் சுட்டுத் தள்ளும்படி ஏ.எஸ்.பி. கூறினர்'

## கன்னுதிட்டி சம்பவத்தை இராணுவம் மீது சுமத்த எஸ்.பி. விரும்பினராம்

### கான்ஸ்டபிள் சட்டநாதபிள்ளை சாட்சியம்

(நமது அலுவலக நிருபர் கா. யோகநாதன்)

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரத்திலுள்ள 'தமிழர்கள் எல்லாரையும் சுட்டுத் தள்ளுங்கள்' என ஏ. எஸ். பி. நூர்தீன், யாழ். பொ ஸ் நிலையத்தில், கட்டுப்பாடில்லாமல் துப்பாக்கிகளுடன் நின்ற பொலிஸாருக்கு உத்தரவிட்டதாக சன்சோனி கமிஷன முன் நேற்று சாட்சியமளித்த பொலிஸ் கன்ஸ்டபிள் திரு. வேலுப்பிள்ளை சட்டநாதபிள்ளை கூறினர்.

கன்னுதிட்டியில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கு தெரியாத ஒருவர் பலியான சம்பவத்தை இராணுவத்தினர் மீது சுமத்திவிட பொலிஸ்அதிபர் விரும்பினர் என இன்ஸ்பெக்டர் பெரேரா கூறியதாகவும் அவர் சொன்னர்.

### பொலிஸ் அதிபர் வீட்டில் சிங்கள பொலிஸார் இரகசிய மாநாடு

பொலிஸ் அதிபர் இல்லத்தில் சிங்கள பொலிஸார் சிலர் இரவில் ரகசிய மாநாடு நடத்திய பின்னர் புங்குடுதீவுக்கு செல்வதாக கூறிவிட்டு சென்று, பழைய மார்க்கட்டிற்கு தீ வைத்ததாகவும் திரு சட்டநாதபிள்ளை கூறினர்.

### தமிழ் பொலிசாரைச் சுட்டுத்தள்ள வேண்டும் என்றர் சார்ஜன்ட்

இயந்திர துப்பாக்கியுடன் நின்ற சார்ஜன்ட் குரே யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலுள்ள தமிழ் பொலிசாரை சுட்டுக்கொல்ல வேண்டும் என கூறியதாகவும், திரு. சட்டநாதபிள்ளை தெரிவித்தார்.

தமிழ் பொலிசார் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு மாதா மாதம் நிதியுதவியளிப்பதாக டி. ஐ. ஜி. அன செனிவரத்தன மாநாடொன்றில் கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

சன்சோனி கமிஷன் விசாரணை நேற்று பத்தாவது தினமாக நடைபெற்றது.

#### ஒருமணி நேரம் சாட்சியம்

யாழ்ப்பாணம் விசேட துப்புத் துலக்கும் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. சட்டநாதபிள்ளை சுமார் ஒரு மணி நேரம் சாட்சியமளித்தார். வழக்கறிஞர் சாம் கதிர்காமர் கியூ. சி. சாட்சியத்தை வழி நடத்தினர். கான்ஸ்டபிள் சட்டநாதபிள்ளை இம்மாதம் 28ம் திகதி காலை 9-30 மணிக்கு தொடர்ந்தும் சாட்சியமளிப்பார்'

திரு சட்டநாதபிள்ளை மேலும் கூறியதாவது:

நான் 35 வருடகாலமாக பொலிசில் கடமையாற்றுகிறேன், ஆகஸ்ட் 16ம தேதி காலை 7 மணிக்கு கந்தோருக்கு போனேன். காலை 8 30 மணிக்கு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலுள்ள அபாய மணி ஒலித்தது. அவசரகாலத்திற்குத்தான் இந்தமணி அடிப்பது வழக்கம். நான் உடனே விறுந்தைக்கு ஓடோடி வந்தேன் அங்கு சார்ஜன்ட், சப் இஸ்பெக்டர் உட்பட சுமார் 150 பேருக்குமேல் கூடிவிட்டனர். எதுவும் நடக்கவில்லை; சும்மா நின்ற எல்லாரும், துப்பாக்கியை தூக்கினர்கள்.

#### தமிழ் பொலிசாருக்கு துப்பாக்கி இல்லை

அன்று தமிழ் பொலிசாருக்கு அந்தநேரம் துப்பாக்கி கொடுக்கவில்லை. பின்பு துவக்கு

(8-ம் பக்கம் பார்க்க)

### நம்பரை அகற்றும்படி நூர்தீன் கூறினர்

சகல சிங்கள பொலிசாரும் வந்துவிட்டனர். பெரும்பாலோர் நம்பர் அணியவில்லை. சிலர் நம்பர் அணிந்திருந்தனர் ஏ எஸ் பி நூர்தீனுடன் சார்ஜன்ட் பண்டாரவும அங்கு நின்றர். பொலிசார் மிலேச்சத்தனமாக நடந்து கொண்டனர் கட்டுப்பாடாக நடக்கவில்லை, ஏ எஸ் பி நூர்தீன் பொலிசாரின் நம்பரை அகற்றும்படி கூறினர். பொலிசார் தாங்கள் விருப்பியபடி றைபிளையும் துவக்கையும் எடுத்துக் கொண்டனர். வழக்கமாக றைபிள், துப்பாக்கி எடுக்கும் போது பதிந்துதான் எடுக்க வேண்டும்.

பொலிசில் பட்டன் பிரிவு, இஞ்ஜினீரிப் புகைப்பிரிவு, ஆயுதப் பிரிவு என மூன்றுபிரிவுகள் உண்டு. ஆயுதப் பிரிவில் பொறுப்பானவர்கள் சுடுவதில் நல்ல அனுபவம் மிக்கவர்கள் என தெரிவு செய்யப்பட்டவர்களே அனுப்பப்படுவதுதான் வழக்கம் ஆனல் 16ம் தேதி இப்படி

**அம்புஷ் 25**

வெங்காயம்-மிளகாய்

பயிர்களை தாக்கும் புளுக்களை

கட்டுப்படுத்த வல்ல

சக்திவாய்ந்த கிருமிநாசினியாகும்.

4000 கன்றுகளுக்கு போதுமான

2 அவுன்ஸ்(50ML) அம்புஷ்

கிருமிநாசினியின் விலை:
ரூபா 35-40 சதம் மட்டுமே

மேலதிக விபரங்கட்கு:

**தரோரு லிமிட்டெட்,**

32, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 7651



சன்சோனி கமிஷன்:

# கேணல் அமிருக்கு நன்றி கூறுங்கள்!

## இப்படிக் கூறினாராம் 'எஸ். பி.' லியனகே

[யாழ்ப்பாணம்]

சன்சோனி கமிஷன் விசாரணையில் அனுராதபுரம் ரயில் கட்டுப்பாட்டதிகாரி திரு. வல்லிபுரம் தமோதரம் பிள்ளை சாட்சியமளிக்கையில் கூறியதாவது: ஆகஸ்ட் 16-ம் தேதி நான் அனுராதபுரத்தில் கடமையாற்றினேன். அன்றிரவு இரு மெயில்வண்டிகளும் அனுராதபுரத்தில் மாறின. அப்போது மாவட்ட மெக்கானிக்கல் திரு. போலியா போன்பண்ணி தமிழ்பிரயாணிகள் ரயில்நிலயத்தில் தாக்கப்படுவதாகவும் உடமைகள் கொள்ளையடிக்கப்படுவதாகவும் கூறினார். அரசஉடமைகளை குண்டர்கள் சேதப்படுத்துவதாகவும் கூறினார்.

நான் உடனே பொலிஸ் அதிபர் இராணுவஅதிகாரி, கொழும்பு கட்டுப்பாட்டதிகாரி ஆகியோருக்கு போன் பண்ணி நடந்தவற்றைச் சொன்னேன். மாவட்டரயில் சுப்பிறிண்டனுக்கும் அறிவித்தேன் உதவிரயில் கட்டுப்பாட்டு அதிகாரிக்கும் அறிவித்தேன்.

திரு போலியர் தொடர்ந்து ரயில் நிலயத்தில் நடப்பவற்றை கூறிக்கொண்டிருந்தார். கட்டுப்பாடு மீறிபிரயாணிகள் தாக்கபடுவதாக கூறினார்.

### 25 பொலிஸார் சிவில் உடையில்

25 பொலிஸார் சிவில் உடையில் யாழ்ப்பாணம் போக நிற்பதாகவும் இந்த பொலிஸார் நடப்பனவற்றை பார்த்துக்கொண்டு நிற்பதாகவும் கூறினர்.

பொலிசாருக்கு சொன்ன போது அவர்கள் எதையும் செய்யவில்லை.

பிரயாணிகள் இங்குமங்குமாக பாதுகாப்புதேடி ஓடிக்கொண்டிருந்தார்கள்.

ரயில்வே பொது முகாமையாளருக்கு அறிவிக்குமாறு இரு தடவை கொழும்பு கட்டுப்பாட்டதிகாரிக்கு அறிவித்தேன் சிறிது நேரத்தில் 10 பொலிஸார் வந்தனர். அவர்களால் நிலமையை கட்டுப்படுத்த முடியவில்லை நான் மீண்டும் சம்பவம் பற்றி கடமையில் இருந்த உத்தியோகஸ்தருக்கு அறிவித்தேன்.

### கூட்டத்தினர் தாக்கினர்

நான் அங்கு இருக்கும் போது ஒரு கூட்டத்தினர் வந்து எனது நெஞ்சிலும் தலையிலும் அடித்தனர். காசு தருமாறு கேட்டனர்.

கமிஷனர்: பணம் தருமாறு கோரினர்களா? —ஆம்

கமிஷனர்: கொடுத்தீரா? ஆம் மற்றும் தமிழ் உத்தியோகத்தர்களுக்கும் அடித்தார்கள்.

புகையிரதநிலைய ஊழியரான களுபண்டாவும் சமையல்காரர் சமரநாயக்கவும் தாக்கினர்கள்.

முதல் தடவை வந்து தாக்கிவிட்டு சென்றனர். 2-ம் தடவைவந்து பயங்கர ஆயுதங்களை கொண்டுவந்து தாக்கினர். அப்போது பொலிஸ் அதிபர் லியனகே அங்கு வந்தார் உடனே அவர்.

### கேர்ணல் அமிருக்கு நன்றி

கேர்ணல் அமிர்தலிங்கத்திடம் போய்ச்சொல்லுங்கள் இப்படி நடந்ததற்கு அவருக்கு நன்றி சொல்லுங்கள் என்றார்.

பின் யாழ்ப்பாணத்தில் நடந்த சம்பவத்துடன் இவற்றை ஒப்பிடுகையில் இது நூற்றில் ஒரு பங்கு தான் என்று பொலிஸ்அதிபர் கூறினர். மற்றும் பொலிஸாருக்கு முன்னிலையில் இதனைக் கூறினர். அப்போது ஆக்கிரோஷத்துடன் காணப்பட்டார். அந்நேரம் அங்கெல்லாம் இரத்தகறைகள் படிந்திருந்தன.

'அவருக்கு நாங்கள் எவ்வளவோ முறை உதவி செய்திருக்கின்றோம். ரயிலில் 'பேத்' புக்பண்ண உதவி இருக்கின்றோம். அவரை நன்கு தெரியும் அப்படியிருந்தும் அந்நேரம் அவர் எங்களுடன் அப்படி நடந்துகொண்டார்.

### வெளியில் வந்தால் வெட்டுவோம்

நான் அவ்விடத்தை விட்டு செல்லவில்லை. 'அந்நேரம் தமிழ் பிரயாணிகள் தவித்துகொண்டு நின்றனர். நாங்கள் இராணுவத்தினரின் உதவியுடன் கச்சேரிக்குச்சென்றோம். அங்கு வெளியில் பெருந்திரளான சிங்களவர் திரண்டு கையைகாட்டி வெளியில் வந்தால் வெட்டுவோம் என எச்சரிக்கை செய்தார்கள்.

நான் யாழ்ப்பாணம் வந்ததும் இடமாற்றம் கோரினேன். என்னை காலிக்கு இடமாற்றம் செய்துள்ளதாக அறிவித்தார்கள். மாவட்ட சுப்பிறின்டன் என்விஷயத்தில் அக்கறை கொள்ளவில்லை செப்டம்பர்மாத சம்பளம் கிடைக்கவில்லை. [க]

### பித்துக்குளி முருகதாஸ் திருமணம்

(சென்னை)

பிரபல பக்தி பாடகர் பித்துக்குளி முருகதாஸ் அண்மையில் திருமணம் செய்துகொண்டார். அவருக்கு வயது 60 சில படங்களில் நடித்துள்ளவரும், பாடகியும், இவரது சிஷ்யையுமான மணமகளின் பெயர் ஜி. கே.. சரோஜா. வயது 36.


### சிற்றுண்டிச்சாலை நடத்துவதற்கான கேள்வி

பரந்தனிலுள்ள பரந்தன் இரசாயனப் பொருட்கள் கூட்டுத்தாபன தொழிற்சாலையில் ஏறக்குறைய 500 ஊழியர்களுக்காக ஒரு சிற்றுண்டிச் சாலையை நடத்துவதற்கு கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேலதிக விபரங்கள் தொழிற்சாலைக் காரியாலயத்தில்பெறக் கூடிய கேள்வி விண்ணப்பப் பத்திரங்களில் கிடைக்கப் பெறும். மீளப்பெற முடியாத வைப்புப் பணமாக ரூபா 25/- ஐயும் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 100/-ஐயும் செலுத்தி இப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

1978 பங்குனி 2-ம் திகதி ந. ப. 12-00 மணிக்கு கேள்விகள் முடிவடையும்.

பொதுமுகாமையாளர்
பரந்தன் இரசாயனப் பொருட்கள் கூட்டுத்தாபனம்.
பரந்தன்,
16-02-78.

8546

### மாநகரசபை யாழ்ப்பாணம் பகிரங்க ஏல விற்பனை

யாழ் முத்திரைச்சந்தையடியில் உள்ள அபாயகரமான மகோக்கனி மரங்கள் 24-2-78ந் திகதி மு. ப. 10-00 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

தெரிவுசெய்யப்பட்ட கேள்விக்காரர் பணத்தை உடனடியாகச்செலுத்தி மரத்தை 3 நாட்களுக்குள் வெட்டி அப்புறப்படுத்தவேண்டும்.

வே. இராஜகோபால்
பதில் மாநகராட்சி மன்ற ஆணையாளர்.
யாழ் மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
17-2-78.

8548

LISTER ENGINE HR3 MGR 2

வள்ளங்களுக்குப் பொருத்தப்படும்
லிஸ்டர் என்ஜின்களுக்கு
உடனே பதிவு செய்து கொள்ளவும். இன்னும் சில
யந்திரங்கள் மட்டும் கைவசம் உண்டு.
ராதா மெஷின் கொம்பனி
95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

8539

சன்சயின் சோப்
சன்சயின் அரை பார்சோப்
பாவனையாளரின் அன்பான வேண்டுகோளுக்கு இணங்க
யாழ்ப்பாண பஜார் கடைகளில்
மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைசெய்ய
ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன
உங்களுக்கு வேண்டிய லாலா நீலசோப்,
சன்சயின் சோப், சன்சயின் பார்சோப் ஆகியவற்றை
பெற்றுக்கொள்ளலாம்
இன்றே கேட்டு வாங்குங்கள்
ஓடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி.

The Fine Arts Society, Jaffna
யாழ். நுண்கலை மன்றம்
அளிக்கும்
பரத நாட்டியம்
o
சிலம்பு
(நாட்டிய நாடகம்)
பங்குபற்றுபவர்கள் :
செல்வி மாலதி தர்மா
செல்வி சகுந்தலா துரைராஜசிங்கம்
செல்வி கண்ணம்மா கந்தசாமி
25-2-78 சனிக்கிழமை
மாலை 6-30 மணி
வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்
டிக்கற் விபரம் :
ரூபா 25/- (2 ஆசனங்கள் ரிசேர்வ்ட்)
ரூபா 15/- (1 ஆசனம் ரிசேர்வ்ட்)
ரூபா 10/- ரூபா 5/-
டிக்கற் ரிசேர்வ் செய்யும் இடம் :
பரணி பார்மசி, யாழ்ப்பாணம்.

8552

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பேஜோ 404.கார் - 3 மீட்டர் சவ்பறி மொடல் [Safary Model] சமீபத்தில் லண்டனிலிருந்து இறக்குமதியானது விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: எவ். சிவரத்தினம், 11/A, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம். 8554

குறுண்டிக்ஸ்றியோறேடியோசிரும் - மாண்டலோ (Mandello) 3 WE/FM மொடல்- 4 ஸ்பீக்கர் FM பான்டுடன், குறுண்டிக் ஸ்றியோ ரேப்றெக்கோடர் TK 248 மொடல். விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: புதிய இல. 127. கச்சேரி நல்லூர் வீதி, சுண்டிக்குளி 19, 20-ந் திகதிகளில் காலை 9-00- மாலை 5-00 மணிக்கிடையில் பார்வையிடலாம். 8502

### தேவை

சீமேந்து வெற்று (B) பாக்குகள் தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். 8522

"தட்டெழுத்து, சுருக்கெழுத்து (ஆங்கிலம்) இலிகிதர் வேலையில், அனுபவம் உள்ளவர்கள் தேவை." நேரில் வரவும். ராதா மெசின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 8540

சோடா பெட்டி ஏற்றி இறக்கி அனுபவமுள்ள தொழிலாளர்களும், லொறியில் வேலை செய்யக்கூடிய தேர்ச்சியும், அனுபவமும் உள்ள கிளீனர்களும் தேவை. விபரங்களுக்கு நேரில் வரவும் பிள்ளையார் ஸ்ரோர்ஸ், இல: 31. மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 8556

இனிப்பு, ரொபி தயாரிப்பதில் அனுபவமுள்ள ஆண்களும், பொம்மைவேலை; பிளாஸ்ரிக் பாக் பின்னுதல் வேலைகளில் நல்ல அனுபவமுள்ள பெண்பிள்ளைகள், மேற்பார்வையாளர் உடன் தேவை. 25-2-78 முன்பாக காலையில் நற்சாட்சிப் பத்திரத்துடன் வரவும். கண்ணு புறடக்ஸ், சுன்னாகம். 8549

பெண்களின் உடுப்புக்கள் தயாரிக்கும் நிலயத்தில் உடுப்புக்கள் வெட்டித் தைப்பதில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். அங்கலின்ஸ் காமன்ஸ், 24/1, பெரியகடை, யாழ்ப்பாணம். 8557

### தேவை

மரவிளையாட்டுப் பொருட்கள் உற்பத்திசெய்யும்தொழிற்சாலைக்கு மெசினில் வேலைசெய்யும் அனுபவமுள்ள வேலையாட்கள் நற்சாட்சிப் பத்திரத்திரத்துடன் நேரடித் தொடர்பு கொள்க. மனேஜர் யாழ். டொயிஸ், 246, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 8531

தேவன்ஸ் சீயாக்காய்பவுடர் மற்றும் தயாரிப்புகள் தயார் செய்வதற்கு பெண்பிள்ளைகள் தேவை. தேவன்மில், 67, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 8513

### வாடகைக்கு

டாக்டர் ஒருவருக்கு நவீன வசதிகள் உள்ள இரண்டு-ஆறு அறைகள் உள்ள வீடு யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு அண்மையில் வாடகைக்கு தேவை. விபரங்களுக்கு: 21/1, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். 8547

### கல்வி

ஜேர்மன் பாஷைக்கான புதிய வகுப்புகள் 1-3-78 ஆரம்பமாகின்றன. தொடர்பு கொள்க: சபாநாயகம், 33, கண்டிவீதி, யாழ்ப்பாணம். 8550

பட்டதாரி ஆசிரியர்கள் வீடுகள் சென்று இலக்கணம் இலக்கியம் (Literature) புத்தக சேவை (Library Service) (ஆங்கிலப்பேச்சு (Spoken English) பொது அறிவு கற்றுக்கொடுப்பார்கள். மத்திய ஸ்தலத்திற்கு வருபவர்களுக்கு சில சலுகைகள் வழங்கப்படும். விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 8258 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 8258


### ஆலோசனைக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியின் வளர்ச்சி சம்பந்தமான ஆலோசனைக் கூட்டமொன்று இன்று ஞாயிறு காலை 9-00 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம் பெறும். வடமாநில கல்வி அதிகாரி திரு. தி. மாணிக்கவாசகர், கோப்பாய் வட்டார கல்வியதிகாரி திரு. வ. தங்கராசா, கோப்பாய் தேசிய பேரவை உறுப்பினர் திரு கி கதிரவேற்பிள்ளை ஆகியோரும் முன்னாள் கல்லூரி அதிபர் திரு. ச. வீரசிங்கமும் இக்கூட்டத்தில் உரையாற்றவுள்ளனர் [கி]



# எங்கே போகிறோம்?

எஸ். பி. கிருஷ்ணன்

"படித்த மனிதரே இப்படிச் செய்வதென்றால், இந்தக் காலத்துப் பொடியளை எப்படிக் குறை சொல்லலாம்..."

புதினத்தாளை மடித்துக் கையில் வைத்துக்கொண்டு என்னைப் பார்த்துக் கேட்டார் செல்லப்பா வாத்தியார்.

யாரைப்பற்றி சொல்லுகிறீர்கள் என்று கேட்டு புதினத்தாளை வாங்கிப் பார்த்தேன்.

இதைப் படியும் என்று, ஒரு செய்தித் தலைப்பைச் சுட்டிக் காட்டினார் அவர்.

"பென்சனியரின் தற்கொலை முயற்சி தோல்வியில் முடிந்தது என்பது தலைப்பு. அதை படித்தேன். பின்னர் வாத்தியாரைப் பார்த்து, "அதற்கும் காரணம் இல்லாமலில்லை வாத்தியார்..." என்றேன்.

"என்ன காரணம் தம்பி... "படித்தவராம்...ஐந்நூறுரூபா பென்சன் எடுக்கிறாராம்—இவருக்கு என்ன கவலை—? சரி கவலைதான் இருந்தாலும் இப்படி ஒரு சமூகவிரோதக் காரியத்தை செய்யத் துணியக்கூடாது..."

"இவரை எனக்குத் தெரியும் வாத்தியார்; என் ஊரவர் தான்...விபரமாகச் சொல்லுகிறேன் கேளுங்கோ" என்றேன்.

"அப்படியா, சொல்லும் சொல்லும்..." என்றார் செல்லப்பா.

●

"சுந்தரம்பிள்ளை ரயில்வேயில் நிலைய அதிபராக இருந்தவர். இளமையிலேயேமனைவி இறந்து போனாள். ஆறு ஏழு பிள்ளைகள்...அவற்றைப் பராமரிக்க வேண்டுமே என்றகாரணத்தை வைத்து இரண்டாம் திருமணமும் செய்துகொண்டார், நாலு பிள்ளைகளைப் பெற்றுக் கொடுத்துவிட்டு அவளும் சில காலத்தில் கண்ணை மூடிவிட்டாள். என்றாலும் அவர் அத்தனை பிள்ளைகளையும் நல்ல முறையில் வளர்த்து வாழ வைத்துவிட்டார். சொத்தும் அனேக. தென்னந்தோட்டமே நூறு ஏக்கருக்கு மேல். எல்லாப்பிள்ளைகளுக்கும் பிரித்துக் கொடுத்து வீடுகளும் கட்டிக் கொடுத்தார். ஒரு பெண் எங்கேயோ வெளியூரில் உத்தியோகம். அவளுக்கு கொடுத்த வீட்டில்தான் இவர் குடியிருந்தார். தனிமையாகத்தான் என்றாலும் பக்கத்துவீடுகளில் மற்றப் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் அன்பில் காலத்தைப் போக்கிவந்தார். ஓய்வு நேரத்தில் பட்டினத்தார் படிப்பார். உலாவுவார். பேப்பர் படிப்பார்? குறையில்லாத மனிதராகவே காணப்பட்டார். ஆனால் வாழ்ந்து கெட்ட மனிதரிடம் வாழத்துடிக்கும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் உரிமைப் போராட்டம், சுரண்டல் தன்மையதாய் வளர்ந்து வந்தது...."

"ஓகோ...இப்ப தெரிகிறது பிரச்சனை..."

"அவை பிரச்சனையாகவே இருக்கவில்லை. அவருக்கு...அவருக்கு ஏன்...? ஒரு வேளை சோறு தவிர, பென்சன் தொட்டு, தோட்டவருமானம் வரை எல்லாவற்றையுமே பிள்ளைகள் பகிர்ந்துகொள்வார்கள். அதற்காக கவலைப்படவில்லை அவர். ஆனால்...அந்த நல்ல மனிதருக்கு நன்றியாக ஒரு தந்தையின் உள்ளத்திற்கு அமைதி தரும்வகையில், எந்தப் பிள்ளையும்நடந்துகொள்ளவில்லை. அதுதான் குறை. நேருக்குநேர் எதிர்த்துப்பேசும் பழக்கம் ... ஐயா என்று அன்பாக அழைப்பதற்குப் பதில் 'அடே' என்பார்கள். அடிபணியவேண்டிய தெய்வத்திற்குச் சமமான தந்தைக்கு அடிக்கப்போவார்கள் ... எதையும் தாங்கும் இதயம்கொண்டவர் சுந்தரம்பிள்ளை ... எல்லாவற்றையும் ஏற்று, இன்றைய புதுமைச் சமுதாயத்தின் போக்கை எண்ணிச் சிரித்துக்கொள்வார்."

"என்றாலும், எதற்கும் ஒரு எல்லையுண்டு, இல்லையா வாத்தியார்...?"

"ஒரு நாள் அவரை, ஒரு மகள் என்றுமில்லாதபடி ஏசிவிட்டாள்:

"உனக்கேனடா பணம்... எல்லாத்தையும் மற்றப் பிள்ளைகளுக்கும் கொடுக்கிறாய்... இங்கேயிருந்து தின்கிறாய்..." இன்னும் ஏதோ சொல்லத்தகாத வார்த்தைகளால் வைதாள். படித்தவள், வெளியூரில் வாழ்ந்தவள், உலகம் தெரிந்தவள். அவளே இப்படி ஏறுமாறாக ஏசினாள் என்றால்... அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. போதும் இந்த வாழ்க்கை என்ற முடிவுக்கு வந்துவிட்டார்".

'இந்த முடிவுதானே தவறென்று நீங்கள் சொல்லுவீர்கள்.... மனித இயல்பு அப்படித்தான் வாத்தியார்... படித்தவன், படியாதவன், ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடின்றி ஒவ்வொரு மனிதன் உள்ளத்திலும் ஒரு சுயிசைட் ரென்டன்சி... உண்டு என்று எங்கேயோபடித்திருக்கிறேன்'.

"நாற்பது ரூபா கொடுத்து ஏதோ ஒரு மருந்தை வாங்கி வந்தார். உடனே உயிர் போக்கும் மருந்தல்ல; குடித்துவிட்டுப் படுத்துக்கொண்டார். சிறிது நேரத்தில் 'ஐயோ...' என்றார். வயிற்றைப் பிடித்துக்கொண்டு புரண்டார். குழறினார். தற்செயலாக அந்தப் பக்கம் வந்த பேரப்பிள்ளைகள் அவரின் அபாய நிலையைப் பார்த்தனர். அருகே கிடந்த புத்தம்புதிய அபாய 'லேபல்' ஒட்டிய போத்தலையும் பார்த்தனர். 'ஐயோ... தாத்தா மருந்து குடித்துவிட்டார்' என்று கூக்குரலிட்டு, ஊரைக்கூட்டி அழுதார்கள்.

காரைப் பிடித்துவந்து ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோனார்கள். அங்கே அவர் மூன்று நாட்கள் கிடந்தார். குணமடைந்தார். பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் எல்லோரும் ஓடி ஓடிப் பார்த்தார்கள், பணிபுரிந்தார்கள். எல்லாவற்றையும் சமமே ஏற்றுக்கொண்டார்கள்.

தூரத்தே இருக்கும் பிள்ளைகள். சொந்தக்காரர் எல்லோருக்கும் அறிவிக்கப்பட்டது. இறந்துவிடுவார் என்று எதிர்பார்த்தார்கள்... மருந்து குடித்தவன் உயிர்பிழைப்பது அரிதுதானே... ஆனால் சுந்தரம்பிள்ளை இன்னும் சிலகாலம் வாழவேண்டுமென்ற நியதிபோலும்... மூன்றாம் நாள், அவரை வீட்டிற்குக் கூட்டிப்போக, அவர் மருந்து குடிக்கக் காரணமாயிருந்த மகளே கார் கொண்டுபோனாள். உண்மையில், அவள் பயந்துபோனாள். தான் ஏசியது தவறு என உணர்ந்தாள். இனித் தந்தையை தன்னுடன் வைத்து அன்பாக பேணவேண்டும் என்றும் தீர்மானித்தாள். ஆனால், பாவம் அவள் அடைந்தது ஏமாற்றம்...வெட்கம்... வேதனை... ஏன் தெரியுமா வாத்தியார்...?

எங்கோ வெளியூரில் இருந்து வந்த ஒரு மகனும் அந்த நேரம் காருடன் ஆஸ்பத்திரிக்கு வந்தான். நான் கூட்டிக் கொண்டுபோய் வைத்திருக்கிறேன் ஐயாவை... நீங்கள் போங்கோ... என்றான். பெண் பிள்ளைகளால் ஒன்றுமே பேச முடியவில்லை. பேசினால், நீங்கள் பார்த்த இலட்சணம் இதோ தெரிகிறதே என்று பலர் மத்தியில் சொல்லிவிடுவானோ சகோதரன் என்று பயந்தார்கள்.

ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேகி தன் ஆண்பிள்ளை ஒருவன் கொண்டுவந்திருந்த காரில் ஏறினார் சுந்தரம்பிள்ளை.

பென்சன் எடுத்த காலத்திலிருந்து பத்தாண்டுகளுக்கு மேலாக வாழ்ந்துவந்த, பிறந்து வளர்ந்துவந்த மண்ணைவிட்டு, பிள்ளைகளை விட்டு, பேரப் பிள்ளைகளைவிட்டு, சேர்ந்து வாழ்ந்த சுற்றத்தைவிட்டு, அயலவர்களைவிட்டு எதிர்த் திசையில் போய்க்கொண்டிருந்தார். அவர் போவதும் ஒரு பிள்ளையுடன்தான். சில புதுப் பேரப்பிள்ளைகளுடன் விளையாடத்தான் என்று அமைதி அடைந்தனர் சிலர்.

ஏனையோர் வந்த வழி திரும்பினார்கள். உயிர்தப்பிய தகப்பனை உயிருடனேபறிகொடுத்த கவலை, அவமானம்... ஐயா எங்கே என்று கேட்பவர்களுக்கு என்ன பதிலைச் சொல்லுவது?

இப்பொழுது அவர்கள் மாத்திரம் அவமானத்தால் அழவில்லை. அவர் வாழ்ந்த சமூகமே அவமானத்தால் அழுகின்றது. சீரோடும், சிறப்போடும் வாழ்ந்த ஒரு மனிதனை பிள்ளைகளை நல்லபடி வாழவழிவகுத்த ஒரு தந்தையைத் தற்கொலை செய்யத்தூண்டிய ஒரு பெண்ணைத் தன்னகத்தே கொண்ட ஒரு சமூகம், அந்த இழிசெயலை எண்ணி அழுகிறது அழுதென்ன பயன்?

இப்ப சொல்லுங்கள் வாத்தியார்...நீங்கள் முதலிலேசொன்னீர்களே ... படித்த மனிதன் இப்படிச் செய்யலாமாஎன்று... பண்பற்ற பல மனிதர் சேர்ந்தமைந்த சமூகத்திலே ஒரு சில படித்த மனிதர் வாழ்வது சுலபமா...? அதுவும் ... இந்தப் புதிய சமுகாயம்இருக்கிறதே... இது எங்கே போய்க்கொண்டிருக்கிறதோ...?

அழிவை நோக்கி ... என்றார் செல்லப்பா வாத்தியார்.

ஆனால்... சுந்தரம்பிள்ளையை அழைத்துப்போனானே ஒரு ஆண் மகன்...அவனைப் பற்றி என்ன சொல்லுகிறீர்கள்...?

'ஓ...அவன்தான் அறிவுள்ள பிள்ளை...மகன் தந்தைக்காற்று உதவி அதுதானே..."

"அத்தகைய பிள்ளைகளால் தான் உலகம் இவ்வளவாகுதல் வாழ்ந்துகொண்டிருக்கிறது — இல்லையென்றால்..."

அழிவை நோக்கி... என்று அவர் சற்றுமுன் சொன்னது நினைவுக்கு வந்தது.

(யாவும் கற்பனை)

# இந்திய சாகித்திய அகாதமி!

## இந்திய இலக்கிய வளர்ச்சியின் உயிர் நாடியாக விளங்கி வரும் 'சாகித்திய அகாதமி' பற்றி நாமும் தெரிந்துகொள்ளவேண்டாமா?

இரு சொற்களின் சேர்க்கையில் பிறந்தது சாகித்ய அகாதமி. சமஸ்கிருதச் சொல் 'சாகித்ய'; 'அகாதமி' கிரேக்கச் சொல். நம் உலகு தழுவிய நோக்கையும் உந்துதலையும் இந்தப் பெயர் குறிப்பிடுகிறது. இலக்கியத்தைக் குறிக்கும் சொல் 'சாகித்ய'; இலக்கிய ஆர்வலர்களின் கூட்டத்தைக் குறிப்பது 'அகாதமி.' படைப்பிலக்கியத்தில், திறனாய்வுத் துறையில் தொட்டிலாக 'சாகித்திய அகாதமி' விளங்குகிறது. இலக்கியத் துறையில் சாதனை புரிந்தவர்களைச் சிறப்பிப்பது. இத்துறையில் உருவாகும் இளைஞர்களை ஊக்குவிப்பது, பொதுமக்கள் ரசனையை வளர்ப்பது, இலக்கியத் தரத்தைத் திறனாய்வு முறையை மேம்படுத்துவது ஆகியவை சாகித்திய அகாதமியின் நோக்கங்கள். இந்த ஆண்டு "குருதிப் புனல்" நாவலுக்காக இந்திரா பார்த்தசாரதி அகாதமி பரிசுபெறுகிறார்

இந்திய மொழிகள் ஒவ்வொன்றிலும் அரிய இலக்கியச் செல்வங்கள் உள்ளன; அதோடுகூடப் புதிதாகக் கவிதை, நாவல், நாடகம்— என்று இலக்கியத்தின் பல துறைகளிலும் குறிப்பிடத்தக்க நூல்கள் எழுதப்படுகின்றன. ஆனால் இந்தியா பல மொழிகளைக்கொண்ட பெரிய நாடாக இருப்பதால் ஒரு மொழியிலுள்ள மிகச் சிறந்த நூல்களைக்கூட இன்னொரு மொழியினர் படித்து அனுபவிக்க அநேக வாய்ப்புகள் இல்லை.

சுதந்திரப் போராட்டகாலத்தில் வங்க மொழியிலிருந்து பங்கிம் சந்திரர், ரவீந்திரநாத் தாகூர், சரத்சந்திரர் நாவல்கள் தமிழில் வெளியாயின.

மகாகவி பாரதியார் பங்கிம் சந்திரரின் வந்தே மாதரம் கீதத்தைத் தம்து நண்பரான குமரேச சர்மாவின் ஆனந்த மடம் நாவல் மொழிபெயர்ப்புக்காகத் தமிழில் ஆக்கித் தந்தார். ஒரு மொழிபெயர்ப்பு திருப்தி தராதுபோகவே, இன்னொரு மொழிபெயர்ப்பையும் செய்தார் மகாகவி பாரதியார். இலக்கியத்தில் மட்டுமன்றி ஞானத்திலும் பாரதியாருக்கு அபார ஈடுபாடு இருந்தபடியால், சம்ஸ்கிருத மூலத்திலிருந்து பகவத் கீதையை மொழிபெயர்த்து நீண்ட விரிவான முன்னுரையுடன் வெளியிட்டார்.

இந்தியிலிருந்து பிரேம் சந்த் கதைகளும், மராட்டியிலிருந்து காண்டேகர் நாவல்களும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. கா. ஸ்ரீ. ஸ்ரீயின் காண்டேகர் நாவல்களின் மொழிபெயர்ப்புகள் பல வெளியாகித் தமிழில் பெரு வெற்றியடைந்தன. ஆனால் பிற இந்திய மொழிகளான கன்னடம், பஞ்சாபி, ஒரியா, குஜராத்தி, மலையாளம், தெலுங்கு, போன்ற மொழிகளிலிருந்து குறிப்பிடத்தக்க நூல்கள் ஏதும் தமிழில் மொழிபெயர்க்கப்படவில்லையென்பது போலவே தமிழின் மிகச் சிறந்த சங்க நூல்களும், நவீன காலத்துப் படைப்புக்களும் பிற மொழியினருக்குக் கிடைக்கவில்லை. அதற்குத் தகுந்த மொழிபெயர்ப்பாளர்கள் இல்லையென்பது காரணமல்ல. நல்ல நூல்களைக்கவனத்தோடு தேர்ந்தெடுத்து ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்குக் கொண்டு செல்லத்தகுந்த நிறுவனங்கள் ஏதும் தேசிய அளவில் செயல்பட முன்வரவில்லை. அதனால், ஒரு மொழியிலுள்ள இலக்கியத்தை இன்னொரு மொழி அறிந்துகொள்ள முடியாத நிலைமை இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகும்கூட நீடித்தது.

ஐரோப்பிய மொழி இலக்கியங்களை ஆங்கிலத்தின் மூலமாக அறிந்து கொள்ள முடிந்தபோது, ஆங்கிலத்தின் வழியாகக் கூட இந்திய இலக்கியங்களைத் தெரிந்து கொள்ள முடியாது போனது விசித்திரமானது:

சுதந்திரத்திற்குப் பிறகு, இந்திய தேசிய மொழிகளிலிருக்கும் மிகச் சிறந்த நூல்களைப் பிற மொழியினருக்கு அறிமுகப்படுத்தும் செயல் திட்டத்தோடு சாகித்திய அகாதமி தோன்றியது.

ஜவாஹர்லால் நேரு, எஸ். ராதாகிருஷ்ணன், அபுல் கலாம் ஆசாத் கே. எம். பணிக்கர் ஆகியோர் இலக்கியக் களமாகிய சாகித்திய அகாதமி நிறுவப்பட காரணமாக இருந்தார்கள்.

'ஜெயபாலன்'

1954இல் ஏற்பட்ட சாகித்திய அகாதமிதான், இந்திய மொழிகளுக்குள் இலக்கிய பரிவர்த்தனைக்கான களம். இந்திய மொழிகளுக்குள் ஒன்றிலிருந்து இன்னொரு மொழிக்கு நூல்களை மொழிபெயர்ப்பதோடு, உலகத்தில் மிகச் சிறந்த நூல்களையும் இந்திய மொழிகளில் மொழிபெயர்ப்பதும் இதன் பணியாகும்.

உலகத்தின் முதல் நாவலென்று சொல்லப்படும் ஜப்பானிய செஞ்சிக் கதை, தற்கால நாடகத்தின் தந்தையென போற்றப்படும் நார்வே தேசத்து இப்ஸனின் காட்டு வாத்து, ஜேர்மன் மகாகவி கதே எழுதிய வாஸ்து, உலக நாவல் இலக்கியத்தின் சிகரமெனக் கருதப்படும் டால்ஸ்டாயின் போரும் அமைதியும், பிளாட்டோவின் குடியரசு, ஷேக்ஸ்பியர் நாடகங்கள், ரூசோவின் சமூக நெறி, டாஸ்டோ வெஸ்கியின் நாவல்கள் போன்றவற்றை மொழிபெயர்த்துள்ளது

இந்தியா பொருளாதாரத் துறையில் மட்டுமின்றி, கலை இலக்கியத் துறையிலும் வளர்ந்து செழித்து புகழ் பரப்ப வேண்டும் என்ற அளப்பரிய ஆர்வத்தோடு சாகிததிய அகாதமி தோன்ற முதல் காரணமாக இருந்த ஜவாஹரிலால் நேருவே அதன் முதல் தலைவர்.

1954-ல் இருந்து தன் கடைசி நாள் வரையில் சாகித்திய அகாதமியின் தலைவராக இருந்த ஜவஹர்லால் நேரு, இது அரசாங்கத்தின் அதிகாரப் பிடியிலிருந்து முற்றிலுமாக விலகிச் சுதந்திரமான நிறுவனமாகச் செயல்பட மிக முக்கியமானவராக இருந்தார்

'சாகித்திய அகாதமியின் தலைவர் என்ற முறையில் பணியாற்றும்போது, பாரதப் பிரதமரின் தலையீட்டை நான் விரும்பவில்லை' என்று நேரு மிகவும் கடுமையாக விமர்சித்தார்:

[அடுத்தவாரம்]

## அறிஞர் ஆனந்தரங்கப்பிள்ளையின் டயரி

# பிரெஞ்சு ஆட்சியின்போது தமிழில் எழுதப்பட்ட சுவையான சரித்திர சம்பவத் தொகுப்பு

**[மேற்கு நாட்டவர்கள் சிறந்த நிர்வாகிகள் என்றும், பெருந்தன்மையானவர்கள் என்றும் நம்மவர்கள் புகழ்வதைக் கேட்கிறோம். ஆனால் அவர்கள் நம்நாடுகளை ஆண்ட காலத்தில் எவ்வளவு பயங்கரமான ஆட்சியை நடத்தியிருக்கிறார்கள்!**

**மனைவி பேச்சைக்கேட்டு ஊரை ஆண்ட ஒரு பிரெஞ்சு கவர்னரின் வீழ்ச்சியைப்பற்றியும் அவரது ஏனைய நடவடிக்கைகள்பற்றியும் ஆனந்தரங்கப்பிள்ளையின் டயரி கூறுகிறது. சுவை நிறைந்த சம்பவங்கள் அடங்கிய அந்த டயரியிலிருந்து சில பகுதிகளைக் கட்டுரையாகத் தருகிறார், நமது சென்னை நிருபர் வி. ரவிச்சந்திரன்]**

டயரி என்பது என்ன? நம் வாழ்வில் நடைபெறும் நிகழ்ச்சிகளை எழுதிவைக்கும் புத்தகத்திற்கு டயரி என்று சொல்வதுண்டு. இது ஆங்கில வார்த்தை. தமிழில் நாட்குறிப்பு என்று சொல்வதுண்டு. நம்மில் எவ்வளவோ பேர் டயரி எழுதுபவர்கள் இருக்கிறார்கள். பிறருடைய டயரியை, அதில் எழுதியுள்ள (அந்தரங்க) விஷயங்களை ரகசியமாகப் படிப்பவர்களும் இருக்கிறார்கள். அந்தத் திருட்டுத்தனத்தில் கிடைக்கும் மகிழ்ச்சியே தனிச் சுவையானதுதான். சுமார் 241 ஆண்டுகளுக்கு முன்பு ஆனந்தரங்கப் பிள்ளை என்ற தமிழரால் எழுதப்பட்ட டயரி எல்லோரும் படிக்கக்கூடியதாயும் சரித்திர முக்கியத்துவம்வாய்ந்ததாகவும் விளங்குகிறது.

யார் இந்த ஆனந்தரங்கப் பிள்ளை? அவருடைய டயரியில் என்ன சிறப்பு உள்ளது என்று பலர் வினவலாம். 1709-ம் ஆண்டு மார்ச் மாதம் 30-ம் திகதி ஆனந்தரங்கப்பிள்ளை சென்னையில் பிறந்தார். சென்னை நகரம் அப்போது பல கிராமங்களாக இருந்தது. அதில் அயனாவரம் என்ற கிராமத்தில்பிறந்தார். வியாபாரக் குடும்பத்தில் பிறந்த இவர் பாண்டிச்சேரிக்குகுடிபெயர்ந்து வியாபாரம் செய்ய ஆரம்பித்தார். பாண்டிச்சேரி அப்போது பிரெஞ்சு வர்த்தகக் கம்பெனியின் வசம் இருந்தது. வியாபாரம்தான் அவர்களுக்குத் தொழில். அவர்களுக்குப் போட்டியாக ஆங்கிலக் கம்பெனிகள் சென்னையிலும் கடலூரிலும் வியாபாரம்செய்து வந்தன. பிரெஞ்சு மொழியில் சரளமாகப் பேசவும், எழுதவும்அறிந்திருந்த ஆனந்தரங்கப்பிள்ளை நாளடைவில் பிரெஞ்சு வர்த்தகக் கம்பெனிக்கு மொழிபெயர்ப்பாளராக அமர்ந்தார். இதனால் பிரெஞ்சுக் கவர்னர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. தன்னுடைய செல்வாக்கினாலும் திறமையினாலும் பாண்டிச்சேரியில் இருந்த பிரெஞ்சு அரசின் முக்கியகாரியதரிசிபோல்விளங்கிய இவர், 1736 செப்டம்பர் 6-ம் திகதி தொடக்கம் தொடர்ந்து 23 ஆண்டுகளுக்கு தாம் கண்டதையும் கேட்டதையும் தமது டயரியில் எழுதி வைத்துள்ளார்.

கவர்னர் மாளிகையில்நடந்த பெரிய நிகழ்ச்சிகளிலிருந்து சாதாரண சிப்பாய்வீட்டு நிகழ்ச்சிவரை எந்த ஒரு சிறு நிகழ்ச்சியையும் அவர் விடவில்லை. கப்பல்வந்ததும்போனதும், படையெடுப்புக்களும்- பாண்டிச்சேரியில் புயல் அடித்ததும் - இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயர்களின் அட்டகாசங்களும் - வால்நட்சத்திரம்தோன்றியதும் அவருடைய டயரியில் உள்ள செய்திகளாகும். இந்த டயரியில் அரசியலைத்தவிர அந்தநாளையபழக்க வழக்கங்களையும் காணமுடிகிறது.

ஆனந்தரங்கப்பிள்ளையால் தமிழில் எழுதப்பட்ட இந்த டயரியின் மூலப்பிரதி இப்போது கிடைப்பதில்லை. ஆனால் இதன் நகல் ஒன்று பாரிஸிலுள்ள நேஷனல் லைப்ரரியில் இருக்கிறது. மற்றொரு நகல் சென்னை ரிகார்டு அலுவலகத்தில் உள்ளது. சென்னையில் உள்ள தமிழ் நகலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து சென்னை அரசு சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் பன்னிரண்டு தொகுதிகளாக வெளியிட்டது. அவருடைய டயரியில் இருந்த சில நிகழ்ச்சிகளை இப்போது காண்போம்.

### 3-8-1746
### புதன்கிழமை ஆடி 22.
### அக்ஷய வருடம்

இன்று எட்டுக் கப்பல்கள் யுத்த தளபாடங்களோடு கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களில் உள்ள ஆங்கிலேயர்களைத் தேடிப்பிடித்துமுறியடிக்க புறப்பட்டன. அவைகளில் போன பொருள்களின் விபரங்கள்: வெடிமருந்து, ஈட்டிகள், ஏணிகள், மண்வெட்டிகள், கூடைகள். ஆடுமாடுகள், பன்றிகள், கோழிகள், உலர்ந்த மீன்கள், கொழும்புச் சாராயம், அரிசி, பருப்பு, நெய், எண்ணெய் விறகு முதலியன. திருகோணமலைக்கு வழிகாட்ட இரண்டு உள்ளூர் மாலுமிகள் போனார்கள். இவர்களைத்தவிர இரண்டு முக்குளிப்பவர்கள் நான்கு படகுக்காரர்கள், ஒரு கட்டுமரம் எல்லாம் போயின. இலங்கையைச் சுற்றிப் போகும்போது கடலோரப் பகுதியின் ஆழத்தைக் கண்டுபிடிக்கவே மேலே குறித்தவைகள் போயின. தவிரவும் நதி முகத்துவாரங்களில் உள்ள மீன்கூட்டம் மற்றும் பலவித ஆபத்துக்கள். இவைகளை முன்கூட்டித் தெரிவிக்கவே அவர்கள் போனார்கள். இங்குள்ள கடல்நிலைமை பற்றிப் பிரெஞ்சுக் காரர்களுக்கு ஒன்றும் தெரியாது. கப்பல் தளபதி இன்னும் பதினைந்து நாட்களில் கமோடர் பேடனை [ஆங்கிலேய கப்பல் தளபதி] கைதியாகக் கொணர்வேன் என்றார்.

### 7-11-1746
### திங்கள் ஐப்பசி 25
### அக்ஷய ஆண்டு

மதியம் உணவு அருந்திய பிறகு கவர்னர் மாளிகையை அடைந்தேன். அவர் பேச ஆரம்பித்தார். மயஸ்கானுக்கும் நமது படைக்கும் கடற்கரையருகே உள்ள மைலாப்பூர் முகத்துவாரத்தில் [இது சென்னையில் நடந்த சண்டை[ சண்டை நடந்தது. முகமதியர்கள் சுட்ட குண்டுகள் ஆற்றிலும் கடலிலும் விழுந்து பலனில்லாமல் போயின. பிரெஞ்சுத் துருப்புகள்சுட்டதில் நிறையப் பேர் கொல்லப்பட்டனர். மயஸ்கான் தன் யானை மீது ஏறி ஓடிவிட்டான். மைலாப்பூரில் இப்போது ஈ, காக்கை கிடையாது. நமது தளபதி பராடிஸ் மைலாப்பூரில் ஒரு மணிநேரம் தங்கிவிட்டு ஊரைச் சூறையாட சிப்பாய்களுக்கு அனுமதி கொடுத்தார். பிறகு மதராஸை நோக்கிப் போகும் வழியில் 30 ஒட்டகங்கள், 60 காளைகள், 50 குதிரைகள் இவைகளைப் பிடித்தனர். குதிரைகள் மீது துணிமணிகளும், பாத்திரங்களும் ஏற்றப்பட்டிருந்தன. [சண்டை நடக்கும் முன்பு ஊரைவிட்டு ஓடிய மக்களும், வணிகர்களும் இந்தச் சாமான்களை அவைகள் மீது ஏற்றியிருந்தார்கள்].

இதைக் கேட்டதும் நான் மகிழ்ச்சியடைந்து கவர்னர் துரையைப் புகழ்ந்தேன்.

திருமதி டியூப்ளே [கவர்னரின் மனைவி] என்னிடம் பிரெஞ்சு சிப்பாய்களில் ஒருவர்கூட இறக்கவில்லையாம்; இது அதிசயமில்லையா? என்று தமிழில் கூறினர்.

மதராஸ் கைப்பற்றப்படும் என்று போனவருடம் மார்கழி மாதத்திலேயே நான் சோதிடம் சொல்லவில்லையா? என்றேன். கவர்னர், நாங்கள் தமிழில் பேசிக்கொண்டிருப்பதைப் புரிந்துகொள்ளமுடியாமல் என்ன பேசுகிறீர்கள்? என்று ஆவலோடு கேட்டார். [இது சின்ன சண்டைதான் என்றாலும் பிரெஞ்சுக்காரர்களின் மண்ணாசை பெரிதும் வளரக் காரணமாயிருந்ததும் இதுவே]

மேற்கண்டவை இரண்டும் அரசியல் செய்திகள். பின்வருபவைகள் மூலம் அப்போதைய சட்டதிட்டங்களை அறியலாம்.

### 16-2-1747
### வியாழன் மாசி 8
### அக்ஷய ஆண்டு

அழிசப்பாக்கம் கிராமத்திலுள்ள வீடுகளில் தீ வைத்த பிண்டாரிகளை [கொள்ளையர்கள்] பிடிக்கத் தூஷ் துரை தலைமையில் சிப்பாய்கள் புறப்பட்டனர். பிண்டாரிகள் சிதறி ஓடினார்கள். அவர்களில் மூன்று பேர் பிடிபட்டனர். அவர்களுடைய கைகளைக் கட்டிப் பாண்டிச்சேரிக்குக் கொண்டு வந்தனர். அவர்களைக் கண்டதும் கவர்னர் கோபத்தில் சப்தமிட்டார். வேப்ப மரத்தில் இவர்களைக் கட்டுங்கள் காப்ரேத்களை [நீக்ரோக்கள்] கொண்டு ஆளுக்கு ஐம்பது சவுக்கடி கொடுக்கச்செய்யுங்கள். அடிபட்டு விழுந்த புண்களில் உப்பைத் தேயுங்கள் என்றார். பிறகு கோட்டையிலுள்ள பாதாளச் சிறையில்தள்ளுங்கள் என்றார். கட்டளை நிறைவேற்றப்பட்டது. ஒவ்வொரு சவுக்கடியின்போதும் கைதிகளின் முதுகிலிருந்தும் குருதி வெள்ளமாகப் பெருக்கெடுத்தது

## திருட்டுக்குத் தூக்குத் தண்டனை

### 7-12-1746
### புதன் கார்த்திகை 25
### அக்ஷய வருடம்

இரண்டு மாதங்களுக்கு முன்பு இரண்டு திருடர்கள் எங்கள் வீட்டுக்கு எதிரேயுள்ள மாதாகோயிலில் திருடினார்கள். இவர்களில் ஒருவன் பிடிபட்டான். மற்றவன் ஓடிவிட்டான். பிடிபட்டவன் காவலில் வைக்கப்பட்டான். இன்று நீதிமன்றம் கூடி, அவனுக்குத் தூக்குத்தண்டனை அளித்தது. நீதிமன்றம் அருகில் மாலை 5-30 மணிக்கு அவன் தூக்கிலிடப்பட்டான். ஆறு மணிக்கு அவனின் சடலத்தைப் புதைத்தார்கள்.

## தொப்பியைத் திருடியவன் தற்கொலை

### 8-4-1747 சனி
### பங்குனி 29
### அக்ஷய ஆண்டு

கவர்னரின் சேவையில் ஓர் ஐரோப்பிய பிடில்காரர் இருந்தார் இவர் மற்றொருவருடைய தொப்பியைத் திருடிவிட்டார். அந்தத்தொப்பி இவரிடம் இருப்பதைக்கண்ட ஒருவர் ஏது? என்று கேட்டபோது ஐரோப்பியர் வேறு ஒருவரிடம் வாங்கினேன். அவரை நாளைக்கு உங்களுக்கு காட்டுகிறேன் என்று கூறிச் சமாளித்துவிட்டார். ஆனால் தனது திருட்டு வெளிப்பட்டால் அவமானம் என்று கருதிய அவர், இன்று தன்னைத் தானே சுட்டுக்கொண்டு இறந்தார். விஷயம் தெரிந்த பிறகு கவர்னர் அவர்மீதுசினம்கொண்டு அவர் செய்த குற்றத்துக்காக அவரது பிணத்தை ஒரு வண்டியின் பின்னால் கட்டி தெருவெல்லாம்இழுக்கச்சொன்னார். இன்று பொழுது சாய்ந்துவிட்டதால் சடல இழுப்பு உத்தரவு நாளை நிறைவேற்றப்படும்.

## பாதிரியார் செய்த தவறு

### 16-12-1748 வெள்ளி
### மாசி 8, பிரபவ வருடம்

முத்தரசப்பிள்ளைச் சாவடியில்உள்ளபடையிலிருந்து ஆறு ஐரோப்பியச்சிப்பாய்கள் தப்பி ஓடப் பார்த்தார்கள் ராணுவ விசாரணை நடந்தது. கப்பல் துடுப்புப்போடும் அடிமைகளாகப் பிரான்சுக்கு ஐந்துபேர்செல்லவேண்டும் என்று தண்டனை அளிக்கப்பட்டது எஞ்சியிருந்த ஒருவரை அந்தச்சாவடிக்கு அருகிலேயே தூக்கிலிடவேண்டும் என்று தீர்ப்பளித்தார். தூக்குத்தண்டனை அளிக்கப்பட்ட ஐரோப்பியச் சிப்பாயைச் சாவடிக்கு அருகே கொண்டுவந்தனர். கழுத்தில் கயிற்றை மாட்டிவிட்டு அவன் நின்றிருந்த ஏணியை எடுத்தனர் அப்போது அவன் தொங்கிய கயிறு சட்டென்று அறுந்து கீழே விழுந்தான். அருகிலிருந்த பாதிரியாரிடம் போய் ''கடவுள் என்னைக் காப்பாற்றிவிட்டார். என் குற்றத்தை அவர் மன்னித்துவிட்டார்'' என்றான். ஆனால் பாதிரியார் உன்குற்றம்மன்னிக்கமுடியாதது என்றார். இதை ஓர் அதிகாரி கேட்டுக்கொண்டிருந்தார். பாதிரியார் அறிவாளியல்ல என்று நினைத்து அவர் அந்தச் சிப்பாயை மீண்டும் தூக்கில் ஏற்றிக் கொன்றார். வழமையாக இப்படிக் கயிறு அறுந்து விழுந்தால் அந்தக்குற்றவாளியைப் பாதிரியார் தமது பொறுப்பில் ஏற்றுக்கொள்ளவேண்டும். மீண்டும் தூக்குப்போடச் சம்மதிக்கக்கூடாது. அதிகாரிகள் மறுத்தால் குற்றவாளிக்குப் பதில் பாதிரியாரே தூக்கில் ஏற முற்படவேண்டும். இதுதான் நடைமுறை. ஆனால் பாதிரியார் நடந்துகொண்ட முறையை ஐரோப்பியர் உட்பட எல்லோருமே கண்டிக்கிறார்கள்.

[ஆனந்தரங்கப்பிள்ளை டியூப்ளே என்ற கவர்னருடன் அதிகம் பழகினர். இன்றைக்கும்பாண்டிச்சேரியில் டியூப்ளேயினுடைய உருவச்சிலை உள்ளது. அவரது பதவியிறுதி பற்றியசெய்திகள்.]

## கவர்னர் நடுக்கம்

### 15-8-1748
### வியாழன் ஆவணி 3,
### விபவ வருடம்

ஆங்கிலேயர்கள் பாண்டிச்சேரியை முற்றுகையிட்டுள்ளனர். நகர மக்கள் கஷ்டங்களை என்னால் வர்ணிக்கமுடியாது. உள்ளே ஒரே குழப்பமாக உள்ளது. மக்கள் பயந்து நடுங்குகிறார்கள். ஆங்கிலக் கப்பல்களைப் பார்த்து கவர்னரே நடுங்கிப்போனார். நகரத்துக்கு உள்ளே யாரும் வரக்கூடாது. வெளியேயும் போகக்கூடாது என்று உத்தரவிட்டார். கவர்னரே இப்படிப் பயந்து நடுங்கினால் பாமரர்கள் என்ன ஆவது? அவரே குண்டுகளுக்குப் பயந்து என் வீட்டுக்கு எதிரே உள்ள மிஷன் சர்ச்சில் குடியேறுவதற்காக அதன் பாதிரியை அழைத்து ஏற்பாடு செய்தால் யுத்தத்தையே கண்டறியாத அப்பாவித் தமிழர்கள் என்னசெய்வார்கள்?


### 6-9-1748 வெள்ளி
### ஆவணி 25.
### விபவ வருடம்

நான் கவர்னரிடம் தமிழர்கள்தான் தைரியமற்றவர்கள் என்று நினைத்தேன். அவர்கள் வெளிநாடுகளுக்குப் போயிராதவர்கள். ஐரோப்பியர்கள் பல நாடுகளைச் சுற்றிப் பல இடங்களைப் பார்த்தவர்கள். அவர்கள் பயந்து நடுங்குவதைப் பார்த்தால் தமிழர்களே தைரியசாலிகள் என்று தோன்றுகிறது என்றேன். கவர்னர் ஒப்புக்கொண்டார். எதிரி தன் கழுத்தை நெரிக்கும்போது அவனை முறியடிக்கவே ஒரு கவர்னர் அல்லும் பகலும் யோசிக்க வேண்டும். உளவாளிகளை நான்குபக்கமும் அனுப்பிச் செய்தியறியவேண்டும் ஆனால் இந்த கவர்னரோ தன் மனைவியிடமிருந்து ஊர்க் கதைகளைக் கேட்டு நேரத்தை வீணடிக்கிறார். கடவுள்தான்

[7ம் பக்கம் பார்க்க]

## யாழ். பரி. பேதுரு மெதடிஸ்த ஆலயம்

# 155வது ஆண்டு நிறைவு விழா



யாழ். நகரிலுள் பிரபல்ய மெதடிஸ்த ஆலயமாகிய பரி. பேதுரு ஆலயம் இன்று பெப்ரவரி 19, தனது 155வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுகிறது. 1823-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19-ம் திகதி இந்தஆலயம் பிரதிஷ்டைசெய்யப்பட்டது. அன்று தொட்டு இன்றுவரை யாழ். குடா நாட்டின் மக்களுக்கு மட்டுமன்றி இலங்கை வாழ் பலருக்கும் இந்த ஆலயம் ஒர் ஆசீர்வாதமாய் இருந்து வந்திருக்கின்றது.

''உலகமே என் ஊழியஸ்தானம், எல்லோரும் இன்புறுவதே என் ஊக்க தொண்டு'' என்ற குறிக்கோளை மனதிலே கொண்டவர்களாய் கிறிஸ்து பெருமானின் அன்பினாலும், ஆணையினாலும் ஏவப்பட்ட ஆதி மிஷனரிமார் உலகின் பல நாடுகளுக்கும் சென்றனர். இலங்கைக்கும் வந்த மெதடிஸ்த மிஷனரிமாருள் வண. ஜேம்ஸ் லிஞ்ச், தோமஸ் ஸ்குவான்ஸ் ஆகிய இருவரும் யாழ்ப்பாணம் வந்து சிறப்பான ஊழியத்தை ஆரம்பித்தனர். அச்சுப் பிரதிகள் இல்லாத அக்காலத்திலே ஒலைகளில் எழுதி தமது தமிழைக்கற்றனர். மக்களோடு பழகினர். அன்போடும், ஆதரவோடும், கண்ணியத்தோடும், மதிப்போடும் நடந்து தம்மாலான தொண்டு முழுவதும் ஆற்றினர். இவர்களது தியாக சேவை நாட்டுமக்களின் மனதைக் கவர்ந்தது. சிறந்த வாழ்க்கைக்கு ஆலயவழிபாடு அவசியம் எனக்கண்ட இவர்கள் முற்றவெளியின் முன்னிருந்த நிலத்தை வாங்கி அதிலே அழகிய ஆலயம் ஒன்றை அமைத்து, அதற்கு பரி.பேதுரு ஆலயம் எனப் பெயரிட்டனர். ஆலயம் வளர்ந்தது. வழிபடுவோர் தொகையும் அதிகரித்தது. பின்னர் தொடர்ந்து வந்த மிஷனரிமார் ஆலயத் தொண்டோடு சேர்த்து மக்கள் மனதைப் பண்படுத்தும் வகையில் அரிய பாடசாலைகளை அமைத்தனர். யாழ். நகரில், அமைக்கப்பட்ட யாழ். மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி ஆகிய இரு பெரும் கல்லூரிகளும் இவற்றோடு இணைக்கப்பட்ட இதர தமிழ்ப் பாடசாலைகளும் மெதடிஸ்த மிஷனரிமாராலேயே கட்டி வளர்க்கப்பட்டவையாம்.

பெண்கள் கல்வி கற்கக்கூடாதென்பது அக்கால நியதி. ஆனால் பெண்கள் கல்வியின் பெருமையை உணர்ந்த மிஷனரிமார் வீடு வீடாகச்சென்று வருந்திக்கேட்டு பெண்பிள்ளைகளைப்பாடசாலையில் சேர்த்தனர். அவ்வாறுதொண்டுசெய்த ஒரு ஸ்தாபனமே இன்றைய வேம்படி மகளிர் கல்லூரி.

**வண. எம். ஏ. இரத்தினராஜா**

வண பீற்றர் பேர்சிவல் காலத்தில் கல்வி மிகவும் வளர்ச்சிபெற்றது. பேர்சிவல் பல பாஷைகளிலே பாண்டித்தியம்பெற்றவர். தமிழிலும் சிறந்த புலமை பெற்ற ஒருவர். லத்தீன், கிரேக்கு போன்ற சிறந்த ஐரோப்பிய மொழிகளை விட தமிழ்மொழி அதன் அமைப்பிலும், அழகிலும், திறமையிலும் மிகச் சிறந்தது என அவர் வாதாடினார். தொடர்ந்து வந்த கில்னர், லொக்வுட், றிம்மர் போன்ற மிஷனரிமார் காலத்தில் மெதடிஸ்த சபை பெரும் வளர்ச்சியடைந்தது. இன்று யாழ்ப்பாணத்தில் படித்தவர்கள் ஏராளம் என்று சொன்னால் அது, கிறிஸ்தவசபையின் தனிப்பெரும் சேவையே என்பதை எவருமே மறுக்க முடியாது. கிறிஸ்தவராயினும், புற மதத்தவராயினும் படித்த எவரும் கிறிஸ்தவ பாடசாலைத் தொண்டுக்கு கடமைப்பட்டவர்களாவார்.

பின்பு வந்த வண. ஜேம்ஸ் மேதர், வண. டி. ரி. நைல்ஸ் முதலிய தேசிய கிறிஸ்தவ தலைவர்கள் காலத்திலும் மெதடிஸ்த சபை பெரு வளர்ச்சி அடைந்தது.

155 வருடங்கள் திருத்தொண்டு ஆற்றிய இத்திருச்சபை கடந்த காலங்களுக்காக கடவுளைத் துதிக்கிறது. இது வரை காத்த கடவுள் இன்னமும் காப்பார் என்ற உறுதியோடும் விசுவாசத்தோடும் எதிர்காலத்தை அது நோக்குகிறது.

இந்த உலகம் கடவுளின் உலகம். அவருடைய ஒழுங்கும், ஆளுகையும், நீதியும் நடைபெறவேண்டிய உலகம். பெரியோர், சிறியோர், உயர்ந்தோர், தாழ்ந்தோர், உள்ளோர், இல்லாதோர், நிறத்தோர், கறுத்தோர் என்ற எந்தவித பேதமும் அற்ற ஒரு புது சமுதாயம் ஆக்கப்பட வேண்டியது அவசியம். அதுவே கடவுளால் மனுஷனுக்கு கட்டளையிடப்பட்ட சமுதாயம், அச் சமுதாயத்தை உருவாக்குவதில் முனைந்து நிற்கும் சகல முற்போக்குச் சக்திகளோடும், மெதடிஸ்த திருச்சபை இணங்கி நிற்கிறது. வருங்காலத்தில் இந்த ஆலயமும் அதன்மூலம் நடைபெறும் ஊழியமும். தொண்டும் எம்நாட்டு மக்களுக்கு ஒரு பெரும் வரப்பிரசாதமாக அமையவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பரி. பேதுரு மெதடிஸ்த ஆலயமே நீ பல்லாண்டு வாழ்க!

## ஒலியோசை நாடகம்

# நடுத தீர்வை

(முன் தொடர்ச்சி)

சிவ: (நைந்து சிரித்து) ஹி... ஹி... என்ன ராசம்மா நான் என்னவோ சொல்ல, நீர் அதை வினையமாக எடுத்துக் கோவிக்கிறீர்.

ராச: (இரக்கமாக) ஓ...அப்பிடியெண்டா மன்னிச்சுக் கொள்ளண்ணை. நீங்கள் ஏதோ வேற எண்ணத்திலதான் பறைஞ்சியளெண்டு சத்தியமாப் பயந்துபோனன்

சிவ. (சிரித்தபடி) கோவிச்சனீரோ, பயந்தனீரோ?

ராச: பயந்துபோனன்.

செல்: (வந்தபடி) என்ன ராசம்மா, பயந்துபோனனெண்ணுறாய்? என்ன சங்கதி, வட்டிக்காசு குட்டியோடு பாக்குமெண்டு பயந்திட்டியாக்கும்.

சிவ: (கலகலத்து நகைத்து) இந்தப் பஞ்ச காலத்தில தன்ர வாய் வயித்தில குஞ்சு குருமன் வந்திடுமோவெண்டுபயப்புடுறு.

செல்: (சினப்பாக) உதென்ன உங்கட வாயில வாற கிலிச கெட்ட பேச்சு? நீங்கள் எப்பன் பேசாமலிருங்கோ. (சப்தித்து-அதிகாரமாக) அது கிடக்க, ராசம்மா இந்தா இதில எவ்வளவெண்டு வடிவா எண்ணிப்பார்.

ராச: (அனுக்கமாக) அங்... என்ன செல்லம்மாக்க, நான் நூறு கேட்டன். இதில எண்பதுதானே கிடக்கு?

செல்: (அழுத்தி) அ...பின்ன என்ன? இருபது ரூபா வட்டி போக, மிச்சம் எண்பதுதேறுது. சரிதானே?

ராச: [ஏக்கமாக] என்னக்கா எடுத்த காசு சுவறமுன்னம் வட்டி எடுத்திட்டியோ? மாசம் முடிய முதலே வட்டி எடுக்கிற வழக்கம் எங்க இருக்கு?

செல்: [கேலிச்சிரிப்புடன்] ராசம்மா, அதை எப்பிடித் தந்தாலும் கணக்கு ஒண்டுதான். காசு பத்தாட்டிச் சொல்லு. முதல் மாத வட்டியைப் பிடிச்சுக்கொண்டுதேவையான தொகை தாறன். இது தான் இப்பத்தை வழக்கம்.

ராச: [பெருமூச்சுடன்] ம்கூ, இந்த எண்பதும் போதுமக்கா, நான் போயிட்டு வாறன். [போய்க்கொண்டு] உந்த நாயைப்பிடியுங்கோ.

[நாய் குரைத்தல்]

சிவ: [அதட்டி] ஏய் லோங்டன்... சும்மா நில்... அ... இஞ்சால வந்து சும்மா சத்தம் போடாம நில்...

**[இசை—இரண்டு]**

களம்: ராசம்மா வீடு

ராசம்மா: (தனியாக) நல்லூரானே, முருகா, இவர் சுகப்பட்டு எழும்பக் கருணைசெய்யாண்டவனே. என்னால் எத்தின நாளைக்கு இப்படிக் கஷ்டப்பட முடியும்......?

ரஞ்சிதம்: (வந்தபடி) அம்மா, எணையம்மா......?

ராச: ரஞ்சிதம், என்னடாம்மா...?

ரஞ்: (அதிர்ந்து) உதேனணையம்மா, தனிய இருந்து இம்மாட்டம் அழுதுகொண்டிருக்கிறே?

ராச: (ஆசுவாசமாக) ரஞ்சிதம், நான் அழேல்லயடா போய் அப்பா வாறாரோவெண்டு பாருங்கோ,

ரஞ்: அப்பா எங்கயம்மா போனவர்?

ராச; வேலைக்கு.

ரஞ்: அப்பா நேத்தும் சுகமில்லாம இருந்தாரே. அப்ப எப்பிடி வேலைக்குப் போவார்?

ராச: இண்டைக்குக் கொஞ்சம் சுகமெண்டு எழும்பிப் போட்டார்.

ரஞ்: எணையம்மா, வேலை செய்தால் அரிசி சாமான் வேண்டலாமெல்லே?

ராச: ஓம், அதுக்கென்ன?

ரஞ்: அப்ப, நேத்துக் காத்தால துவக்கம் இம்மட்டு நேரமா, ஏனம்மா சோறு காச்சேல?

ராச: (பதறியழுது) ஆ... அய்யோ...ஆ...நான் பெத்த என்ர குஞ்சே...நான் என்ன செய்ய?

ரஞ்: (பரதவித்து) எணையம்மா, அதுக்கு ஏனணை உப்பிடி அழுறீங்கள்? எனக்குப் பசிக்கேலயணை, அழாதையுங்கோணை...

சிவலிங்கம்: (கதவுதட்டி — செருமிக்கனைத்தபடி) தார்வீட்டில? உங்க ஐயாத்துரை இருக்கே?

ராச: (வந்துகொண்டு) தாரது? அ...சிவலிங்க மண்ணையே? வாண்ணை, இதில இருங்கோ.

சிவ: (சிரித்தபடி) பறவாயில்லை ராசம்மா, நான் இருக்கிறன். (அழுத்தமாக) அது கிடக்க, இதுதானே உம்மட மூண்டாவது பிள்ளை ரஞ்சிதம்?

ராச: இல்லையண்ணை, இது ரண்டாவது.

சிவ: அதுதானே பாத்தன், 'கிசு கிசு' வெண்டு வளந்திட்டுது. அதுசரி, ஐயாத்துரை எங்க போட்டுது?

**எஸ். அகஸ்தியர்**

ராச: சரியாச் சுகப்படேல்ல, மறிக்கவும் கேளாமல் ஏதும்வேலைவெட்டிசெய்வமெண்டு வெளிய போட்டார்.

சிவ: அ...அப்பிடியே (ஏக்க பாவனையில்) ரஞ்சிதத்தின் முகம் வாடிப்போயிருக்கே, ஏதேன் சுகயீனமோ?

ராச: (தழுதழுத்த குரலில்) ம்......சகோதரம்போல உதவி செய்யிற உங்களுக்குச் சொன்னால் என்ன? நேற்றுக் காத்தால குடுத்திச் சரியான சாப்பாடேயில்லை. நானெண்டாலும் வயித்தைக் கட்டிக்கொள்ளுவன். (தவித்து) இந்தக் குஞ்சுகள் வயிறு எக்கித்துடிக்க என்ர பெத்தவயிறு தாங்காமல் தவிக்குது? (தொண்டை கரகரக்க) நான் என்ன செய்ய?

சிவ: (பொச்சடித்து) த்சொ......த்சொ... ராசம்மா, கஷ்டங்களை இப்பிடி நேரத்தோட சொல்லியிருந்தால் நான் கைதூக்கியிருப்பனே. ம்.... இந்தா இதில இருபது ரூபா இருக்கு, ரஞ்சிதத்தைக் கடைக்குவிட்டு ஏதேன் அரிசி சாமான் வேண்டிச் சமையுங்கோ.

ராச: கேட்டதுக்கு மெத்தப் பெரிய உபகாரமண்ணை. சுமையான காசு வேண்டாம். வைச்சிருங்கோ.

சிவ: பரவாயில்லை ராசம்மா' கூச்சப்படாமல் வாங்கி, முதல்ல பசி பட்டினியைக் கவனியுங்கோ. (தொனி வைத்து) இந்தா பிள்ளை ரஞ்சிதம், நீ என்ர பிள்ளை மாதிரி, வெக்கப்படாமல் வந்து வாங்கிக்கொண்டுபோய் வா.

ரஞ்: (அனுக்கமாக) ம்...கூ வேண்டாம்......வேண்டாம்.

ராச: ரஞ்சிதம், அப்பிடி மறுக்காதை மாமா அன்பாத் தாறதை மரியாதையா வாங்குங்கோ.

சிவ: அ... இந்தா பிள்ளை, கடைக்குப் போயிட்டு வாரும்.

ராச: (அழுத்தமாக) பிள்ளை ரஞ்சிதம். இஞ்ச அந்தக் காசை என்னட்டத் தா.

ரஞ்: அ...... இந்தாம்மா.

ராச: (கோபமாகச் சபித்து) சிவலிங்கமண்ணை! நீர் ஏன் இப்பிடி உருகுறீரெண்டு எனக்கு விளங்கும். இந்தாரும் (தாள்கள் கிழிபடும் ஒலி) இது தான் உம்மட காசு. (ஆவேசித்து) சிக், நீரும் ஒரு மனுஷனு? பணத்தைக் காட்டி என்ன ஆட்டம் போடுறியள்? தூ, நாங்க பணத்துக்கு ஆடுற ஆக்களில்லையண்ண, தெரிஞ்சுகொள்ளும்.

சிவ: (அதிர்ந்து-சமாளித்து) ராசம்மா, நான் உம்மட வீடு தேடிவந்து உதவ நீர் இப்பிடிச் சொல்லுகிறீர்? என்ர மனசைப் புரியாமல் என்னை வித்தியாசமாக நினைச்சிட்டீர். காசு வேண்டாமெண்டால் திருப்பித் தந்திருக்கலாம், கிழிச்சுப் போட்டீர். வேற தரவளியெண்டால் என்ன நடக்கும்? (பெருமூச்சுடன்) ம்......நான் உமக்காக இரக்கம்பட, நீர் என்னில தப்பாக நினைச்சுச் சீறி விழுந்திட்டீர். பறவாயில்லை நான் வாறன்.

ராச: (சத்தமாகப் பிரலாபித்து) ஆ..... சிவமண்ணே, நான் பாவி...மடைச்சி...உங்களைப் புரியாமல் கேவலமாக நினைச்சிட்டனண்ணே. என்னை மன்னிச்சிடுங்கோ. (பரதவித்து) அய்யோ நான் இப்ப கிழிக்சுப் போட்டதாளுக்கு என்ன வகை செய்ய? ஆத்திரத்தில அவசரப்பட்டு மோட்டுத்தனமா நடந்திட்டனே, என்னை மன்னிச்சிடண்ணே...

சிவ: (அழுத்தமாக) ராசம்மா, காசல்ல, எனக்கு மனிசர்தான் பெரிசு இந்தக் காசுபோனால் இதைப்போல ஆயிரத்தை ஒரு நிமிட்டில சம்பாதிப்பன். ஒரு உயிர் போனால் தேடலாமா?

ராச: எண்டாலுமண்ணை...

சிவ: இனி அதைவிட்டுத் தள்ளு ரஞ்சனியைக் கடைக்கு அனுப்பி ஏதும் வேண்டிச் சமையுங்கோ. (உரத்ததொனியில்) இந்தாபிள்ளை ரஞ்சனி, இதில் இருபது ரூபாய் இருக்கு, இதுக்குச் சாமான் வேண்டி வாரும்......

ரஞ்; (அனுங்கியபடி) அம்மா, இதென்னணை....?

ராச: ரஞ்சிதம் காரியமில்லையடா வேண்டுங்கோ.

ரஞ்: ம்...சரியம்மா...

சிவ: பிள்ளை ரஞ்சிதம், ஒரு பைக்கட் சிகரட்டும் வாங்கி வாரும்.. ...

ராச: சிகரட்டோ? என்ன சிவமண்ணை, இப்ப இந்த வீட்டில யிருந்து புகைக்கிறது சரியே?

சிவ: தவா வந்தால் வீட்டில் குடிச்சாலென்ன, றோட்டில் குடிச்சாலென்ன? ஒண்டுதானே?

ராச: பிள்ளை, ரஞ்சிதம், சுணங்காமல் பொன்னம்மா கடையில் வாங்கிக்கொண்டு கெதியா வாருங்கோ.

ரஞ்: [போய்க்கொண்டு] சரியம்மா கெதியில் வாறன்.

சிவ: (செருமிவிட்டு) ராசம்மா நீர் என்னைச் சரியாகப் புரியாமல் நடந்திட்டீர். காரியமில்லை. நான் உம்மட்ட ஏன் வந்தனெண்டு தெரியுமோ? தெரிஞ்சால் உப்பிடிக் கேந்தியாகப் பேசியிருக்கமாட்டீர்.

ராச: என்னது சொன்னாத்தானே தெரியும்?

[7ம் பக்கம் பார்க்க]

(பின்வரும் கட்டுரை 1975ம் ஆண்டு ஜனவரி மஞ்சரியில் பிரசுரமானது இதை எழுதிய எஸ். ராமசாமி என்பவர் மேட்டூர் அணையில் அதிகாரியாகப் பணிபுரிபவர். இதை மறுபிரசுரம் செய்ய அனுமதி அளித்த மஞ்சரிக்கு நன்றி).

## ஆவியுலகத் தொடர்பு—19

# இந்தியப் பிரமுகர் அமெரிக்காவில் பெற்ற புதுமை அனுபவம்!

சில ஆண்டுகளுக்கு முன்பு நானும் எனது அலுவலக நண்பரும் அமெரிக்கா சென்று வந்தோம். தொழில் துறையில் விசேஷ பயிற்சி பெறுவதற்காக மேலதிகாரிகள் எங்களை அனுப்பினார்கள். விஞ்ஞானத்திலும் பிறதொழில் நுட்பங்களிலும் வியக்கத்தக்கசாதனைகள் புரிந்துவரும் நாடு அது அங்கே இந்தியானா மாநிலத்தைச் சேர்ந்த செஸ்டர்ஃபீல்டு என்ற சிற்றூரில் எங்களுக்கு சில விநோதமான அனுபவங்கள் ஏற்பட்டன.

ஓர் அமெரிக்க நண்பர் திரு. டி.பி அயர்ஸ்ட் நாங்கள் அவசியம் செஸ்டர்ஃபீல்டு சென்று வரவேண்டும் என்று வற்புறுத்தினர். சிகாகோ நகரிலிருந்து சிலமணிநேரம் ரயில் பிரயாணம் செய்து நாங்கள் செஸ்டர்ஃபீல்டை அடைந்தோம். ஆகஸ்ட் மாதத்தில் ஓர் இதமான பிற்பகல் நேரம் அது. நானும் என் நண்பரும் [ஸ்ரீராஜகோபால்] ஊர்சுற்றிப் பார்க்கலாமென்று எங்கள் விடுதியில் இருந்து கிளம்பினோம்.

அருகிலேயே ஓர் இடத்தில் சிறு கூட்டம் நடந்து கொண்டிருந்தது. குமாரி எடித் ஸ்டில்வெல் என்ற பெண்மணி கடவுளைப்பற்றியும் ஆன்மீகத்தைப்பற்றியும் பிரசங்கம் செய்தார். சொற்பொழிவுகளின் முடிவில் அந்தப் பெண்மணி கூட்டத்தினரில் சிலரைப் பெயர் சொல்லி அழைத்தார். அவரவர் உள்ளக் கிடக்கைகளுக்கு ஏற்பச் செய்திகளும் தெரிவித்தார்.

அப்போது அவர் அந்நியர்களும் முன்பின் அறிமுகம் இல்லாதவர்களுமான எங்கள் இருவர் பெயர்களையும் கூட கூப்பிட்டார். அதைக்கேட்டு நாங்கள் அப்படியே திகைத்துப்போய்விட்டோம். உச்சரிப்பதற்கு நெருடான இந்தியப் பெயர்களை அதுவும் நாங்கள் அங்கு சென்ற இரண்டு மணி நேரத்திற்குள் எப்படித்தான் தெரிந்து கொண்டாரோ? ஆவியுலக மீடியமான அவர் ஆவிகள் மூலம்தான் இதைச்சாதித்தார் என்று ஊகித்தோம். அன்று இரவே நாங்கள் இது போன்ற இன்னொரு கூட்டத்திற்குச் சென்றோம். பிரபல ஆவியுலகஅறிஞர் ரெவரண்ட் க்ளிஃபோர்டு பயஸ் என்பவரின் இல்லத்தில் அந்தக் கூட்டம் ஏற்பாடாகியிருந்தது. டிரம்பெட் சியான்ஸ் எனப்படும் அந்தக்கூட்டத்தில் பத்து முதல் இருபதுநபர்வரை பங்கு கொள்வார்கள். அதை முன்னின்று நடத்துபவர் ஆவியுலகத்தோடு தொடர்புகொண்டு சில ஆவிகளை அழைத்துப் பேசுவார். கூட்டத்தினரோடும் ஆவிகளை உரையாடச் செய்வார்.

குறிப்பிட்ட ஒரு ஆவி டிரம்பெட் என்ற வாத்திய முழக்கத்தோடு தன் வருகையைக் கூட்டத்தினருக்குத் தெரிவிக்கும். பிறகு அன்றைய கூட்டத்திற்கு வந்துள்ளவர்களையெல்லாம் அவரவர் அமர்ந்துள்ள வரிசைப்படி பெயர் சொல்லி அழைக்கும். சியான்ஸ் அறை ஏறக்குறைய இருட்டாகவே இருக்கும். அந்த நிலையில் ஏற்கனவே பார்த்து வைத்திருப்பவர்களால் கூட அத்தனை பேரையும் அமர்ந்திருக்கும் முறைப்படி பெயர் குறிப்பிடுவது சாத்தியமில்லை.

அன்றையதினம் ஸில்வியா என்ற பெண்ணின் ஆவி இறங்கி வந்திருந்தது. ரெவரண்ட் பயஸ் நடாத்தும் சியான்ஸுக்கு பெரும்பாலும் அதுதான் பங்கு கொள்ளும் என்று சொன்னார்கள் அந்த ஆவி அன்று மிகவும் உற்சாகத்தோடு பேசிக் கேலி செய்து கூட்டத்தினரிடையே நிறையச் சிரிப்பு அலைகளை எழுப்பிற்று.

### ஆவிகள் உலவுவதை நேரில் கண்டதாகக் கூறுகிறார் இவர்.

### ஆவிகளைக் கண்டோம்

மறுநாள் காலை நாங்கள் வேறொரு வகையான ஆவியுலகத் தொடர்புகூட்டத்திற்குச் சென்றோம். மெட்டீரியலைசேஷன் சியான்ஸ் எனப்படும் அந்தக்கூட்டம் தொடர்ந்து பலமணிநேரம் நடந்தது. வழமைபோல் மிகமிகக் குறைந்த வெளிச்சம் உள்ள அறையிலேயே எல்லோரும் குழுமியிருந்தோம். மீடியம் எனப்படும் தொடர்பினரின் உதவியால் கண் எதிரே சில ஆவி வடிவங்கள் தோன்றி உலவின. அவற்றின் முகச்சாயலோ, உடல் உறுப்புக்களோ தெளிவுபடாமல் இருந்தது உண்மைதான். ஆனாலும் மனித வடிவு பெற்ற ஆவிகள் அந்த அறையில் உருவாகி உலவுவதை நாங்கள் கண்டோம்.

இதில் இன்னொரு சுவையான விஷயம். கூட்டத்தினரில் ஒருவரைப் பெயர் சொல்லி அழைத்து, அவரைக் காண ஆவி வடிவில் அவருடைய தாயாரோ- தந்தையாரோ அல்லது வேறு உற்றார் உறவினரோ யார் வருகிறார்கள் என்பதைத் தெரிவிப்பது தான். அதோடு அவருடைய வாழ்க்கையில் நடைபெற்ற ருசியான அந்நியோன்னியமான சில நிகழ்ச்சிகளும் தெரிவிக்கப்பெறும்.

இக்கூட்டத்தில்தான் நாங்கள் டாக்டர் ஹென்றிமில்லர் என்பவரைச் சந்தித்தோம். தம் இள வயது மகள் நெல்லியை இழந்து பரிதவித்துக் கொண்டிருந்தவர் அவர். மிகவும் மனம் உடைந்த நிலையில் ஒருநாள் அவர் செஸ்டர்ஃபீல்டுக்கு வந்து சியான்சில் கலந்து கொண்டார். அங்கே அவருடைய அருமை மகளுடைய ஆவி உருப்பெற்று உலவுவதை கண்டார். அந்த ஆவி அன்று அறையின் ஒரு மூலையில் வைத்திருந்த பியானோ என்ற வாத்தியக்கருவியின் அருகே சென்று இசை எழுப்பியது. நெல்லி உயிரோடு வாழ்ந்த நாட்களில் வாசித்த பாடல்களையெல்லாம் மீண்டும்வாசித்தது. டாக்டர் மில்லரும் பிறரும் அதைக்கேட்டுப் பரவசம் அடைந்தனர். அன்று முதல் டாக்டர் மில்லர் மிகுந்த ஆறுதல்பெற்று அடிக்கடி சியான்ஸ் கூட்டங்களில் கலந்துகொண்டார்.

இதைவிடவும் வேறோர் அதிசயம் நிகழ்ந்ததாம். ஒருநாள் ரஷிய ஆவி ஒன்று தோன்றி அந்த அறைக்குள் கிடந்த வண்ணங்களை கொண்டு துணிகளில் சில நிமிடங்களில் வண்ணப் படம் ஒன்றைத் தீட்டியதாம். கூட்டம் முடிந்து

**வி. ரவிச்சந்திரன்**

வெளிச்சத்தில் பார்த்ததும் அது நெல்லியின் உருவப்படமாக இருக்கக் கண்டார் டாக்டர் மில்லர். அவருடைய மகள் இறப்பதற்கு சிலநாள் முன்பு எடுத்த புகைப்படத்தின் நேர்ப் பதிப்பாக அது இருந்தது. டாக்டர் மில்லர் அந்த வண்ண ஓவியத்தைப் பொக்கிஷம் போல பாதுகாத்து வருவதில் வியப்பு ஒன்றும் இல்லை. அதிலிருந்தே பல பிரதிகள் எடுத்துவைத்திருந்தார். அவர் எங்களுக்கும் ஓர் பிரதி அன்பளிப்பாகக் கொடுத்தார்.

அன்றே நாங்கள் மூன்றாவது வகையான சியான்ஸ் கூட்டத்தில் கலந்துகொண்டோம். அப்போர்ட் எனப்படும் இத்தகைய சியான்ஸ்களை நடத்துபவர் ரெவரண்ட் கொன் பங்கர் என்பவர். முன்னணிலையிலுள்ள ஆவி உலகத் தொடர்பாளர்களில் ஒருவர். திஸில் என்கிற குட்டித் தேவதையை வசமாக்கி அதன் உதவியால் ஆவிகளை அழைப்பார் அவர், அவருடைய சியான்ஸ்களில் காலஞ்சென்ற உலகப் பிரமுகர்களின் ஆவிகள் நம்முன்னே தோன்றி உலவும். அவரவர்க்கு ஏதேனும் செய்திகள் இருந்தால் தெரிவிக்கும். அந்த ஆவிகள் ஓர் ஒளிப்பொறி போல் தோன்றி நம்மைக் கடந்து செல்லும். எல்லோரும் மடி மீது கைகளை விரித்தாற்போல் வைத்திருப்பார்கள். போகிற போக்கில் அவை அவரவர் கைகளில் ஏதேனும் ஒரு பொருளைப் போட்டுச்செல்லும். நாம் இதைப் பத்திரமாக வைத்திருந்து கூட்டம் முடிந்தது' வெளிச்சத்தில் எடுத்துப் பார்க்கலாம்.

### எடிசனின் ஆவி

அன்று எனக்குப் பிரபல விஞ்ஞான மேதை தாமஸ் ஆல்வா எடிஸன் ஆவி வடிவில் வந்தார். அந்த அனுபவம் என்னைப் புல்லரிக்கச் செய்தது, அவர் மனித குலத்தின் மேம்பாட்டுக்காக அறிவியல்துறையில் கவனம்செலுத்தி நாம் அயராமல் உழைக்கவும் மற்றும் பரமார்த்திக விஷயமாகவும் என்னோடு உரையாடினார். அவர் விடைபெறும் போது என் கைகளில் வெண்ணிலக்கல் ஒன்று விழுந்திருந்தது. [நான் அதை ஒரு மோதிரத்தில் பதிந்து நெடுநாள் என் விரலிலேயே அணிந்து கொண்டிருந்தேன்.] பிறகு நான் பங்கரின் திஸில் தேவதை என் கரத்தில் பூங்கொத்து ஒன்றை போட்டுவிட்டுச் சென்றது. அது ஒரு தனி அதிர்ஷ்டம் என்று எல்லோரும் என்னிடம்சொல்லி வியந்தார்கள்.

செஸ்டர்ஃபீல்டில் மூன்று நாள் நாங்கள் பெற்ற அனுபவங்கள் எங்களால் எளிதில் மறக்கமுடியாதவை. மரணத்திற்கு அப்பாலும் ஒருவகையான நல்வாழ்வு சாத்தியம் என்பதை நாங்கள் உணர்ந்தோம். ஆவிகளைக் குறித்தோ மரணத்தைக் குறித்தோ நாம் அச்சப்படத் தேவையில்லை. ஆவிகளின் தொடர்பால் நாம் மன ஆறுதலும் தேறுதலும் பெறலாம்என்று கண்டுகொண்டோம்.

## யாழ். கலையரங்கில் 'பஸ்மாசுரன் 77''

கலாசிருஷ்டிகள் நல்ல கருத்துக்களை, உணர்வுகளை சுவைஞர்கள் உள்ளத்தில் பாய்ச்ச வேண்டுமென்பர் கலை வல்லுநர்கள் 11-2-77ல் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சட்டத்தரணி திரு. மு. ஆலால சுந்தரம் அளித்த கலைஞர் வேலானந்தன் குழுவினரின் 'பஸ்மாசுரன் 77' என்ற நாட்டிய நாடகம் மேற்கூறிய அம்சத்துக்கு அழுத்தம் கொடுத்து பெருமளவு வெற்றியிட்டியுள்ளது.

இடைவேளைக்கு முன்,1977ல் அநுராதபுரத்தில் நிகழ்ந்த வன்செயல் அவலங்களைச் சுட்டி நிற்கும் வகையில் நாட்டிய நாடகக் கதை ஓட்டம் அமைந்திருந்தது. இல்லறத்தில்அடிவைக்கும் இளம தமிழ்க் குடும்பம். குழந்தைச் செல்வம் பெற்று குதூகலித்து அயல் இனத்துடன் சகோதர பாசத்துடன் வாழும் பாங்கு, சிங்கள நண்பனே இன்னல்புரியும் கட்டம், அதனைத் தொடர்ந்து அகதிகள் முகாமில் அகதிகள் அவலம், அவர்கள் சிந்தனைச் சுழல், சூழுரை என்பன சித்திரிக்கப்பட்டன.

இன்பம், குதூகலம் என்பன அழகாகக் காட்டப்பட்டாலும் கோரம் அவலம் என்ற உணர்வுகள் விஞ்சியும் பீறிட்டும் நின்றமைக்கு இந் நாட்டிய நாடகம் கதகளி அமைப்பில் அமைந்தது காரணமெனலாம் தமிழ் இளம் பெண்ணாக பங்கு கொண்டவர் ஆட்டத்தில் பாவங்களில் தெளிவும் துடிப்பும் பின்னிப் பிணைந்தன. அகதிகளாக வந்து அவலத்தைக்காட்டி,பின் சூளுரைத்தவேளை பாடலில் - நாட்டியத்தில் விறுவிறுப்பும் பார்வையாளரிடம் உணர்வோட்டமும் நிலவின. ஆணவம், அசுரத்தனம் புரியும் அட்டூழியங்களைப் பார்த்தவேளை ஏற்பட்ட உணர்வோட்டங்கள் பல.

இடைவேளைக்குப் பின்னே கலைஞர் வேலானந்தன் பஸ்மாசுரனாக மேடையில் தோன்றுகிறார். அவரது ரூபம், உக்கிர ஆட்டம் தாளக்கட்டுக்கமைய துரித கதியில் ஆடும் சிறப்பு, முகபாவங்களில் தெறிக்க வைத்த பல்வேறு உணர்வு உக்கிரகட்டத்தைக் காட்ட வானில் உயர்ந்தெழுந்து, உடலின் ஒவ்வொரு அங்கத்திலும் உணர்வுகளைத் தேக்கியவகை 'கதகளிக்கோர் வேலானந்தன்' என்று புகழவைக்கின்றன. நாட்டிய நாடகத்தின் பிற்பகுதி கூடியளவு கலாரூபம் உடையதாய் அமைந்துள்ளது எனலாம்.

கதையோட்டத்தைப் பொறுத்தவரை முன்பின்பகுதிகள் இணைக்கப்பட்ட விதத்தில் இயற்கைத்தனம் இறக்கமுறவில்லை. செயற்கையான ஒட்டு நிலையைவிட முழுவதும் இயற்கையான கதைக்கோர்வையில் அமைந்தால்இன்னும் மேம்பட்டிருக்கலாம்.

விறுவிறுப்பான அர்த்த புஷ்டியுள்ள பாடல்கள், உணர்ந்து அட்சரசுத்தியுடன் பாடப்பட்ட சிறப்பு, பின்னணியின் வேகம் ஒத்துழைப்பு நாட்டிய நாடகத்தை மெருகூட்டின.

— கலைப்பேரரசு
ஏ. ரீ. பொன்னுத்துரை

## வரப்பெற்றோம்

'மாணவ முரசு' ஜனவரி இதழ் வரப்பெற்றோம்.

ஆசிரியர் உலகத்தையும், மாணவர்களையும் எதிர்நோக்கும் பல செய்திகளைக்கொண்டதாக மாணவர் முரசுவிளங்குகிறது.

'ஆசிரியர் இடமாற்றங்களில் அரசியல் தலையீடு' என்ற செய்தி இப் பத்திரிகைக்கு அவசியமான செய்தியாகத் தோன்றவில்லை உயர்தர வகுப்பு மாணவர்களுக்குத் தேவையான அறிவூட்டும் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. இதன் விலை' 45 சதம். ஆசிரியர்: நாதன். பத்திரிகை தொடர்ந்து வெளிவரவேண்டும் என வாழ்த்துவோம்.

(வ-ம்)

## விசித்திரமான மிருகம்

'நு' (Gnu) என்பது ஒருவகைவிசித்திரமான வன விலங்கு. எருமை மாட்டைப் போல தலையும் கொம்புகளும் கொண்ட இந்த மிருகத்தின் முதுகும், பிடரி மயிரும் கழுதைபோல இருக்கும், குதிரைக்கு இருப்பதுபோல் நீண்ட அடர்த்தியான வால் உண்டு. இவைகளில் சில வற்றுக்கு வரிக்குதிரைக்கு இருப்பதுபோல் உடம்பில் வரிகளும் உண்டு.

சாதுவான இந்த இன மிருகங்கள் தென் ஆபிரிக்காவில் காணப் படுகின்றன. [வ-ம்]


ரீப்போல் இப்பொழுது கைக்கடக்கமாய் உள்ளது
உபயோகத்திற்கு - இலேசாக அழுத்தி எடுக்கக்கூடிய ஒரு புதிய பக்கெட்டில் கிடைக்கிறது


மற்றொரு தரமான லங்கெம் தயாரிப்பு

RIO
Daily 4 Shows
Richard Harrison
in
Killers Are Challenged
(கொலைகாரருக்குச் சவால்)
An Extremely Thrilling Drama

From; 18-2-78
Regal Jaffna Daily 4-45, 7-00 & 9-30 p.m.
Crazy Girls and the Funny Boy

மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஏ. வி. எம். ராஜன், ஜெயலலிதா, நாகேஸ்
அனாதை ஆனந்தன் (கலர்—புதியபிரதி)

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க 23-2-78 வரை
நீடிக்கப்பட்டுள்ளது
இன்ஸ்பெக்டர் மனைவி
24-2-78 முதல் ஜெமினி, பத்மினி, ராதா நடித்த சித்தி

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
பாலசந்தரின்
எதிரொலி சிவாஜி, கே.ஆர்.விஜயா
நாகேஷ்
(புத்தம் புதிய பிரதி)
சிறுவர்களுக்கான ஆங்கிலப்படம்!
சனி, ஞாயிறு காலை 8-30 மணிக்கு மட்டும்
காண்பிக்கப்படும்
"Kingdom in the Clouds"
ஆசனங்கள் அனைவருக்கும் அரைக் கட்டணம்
பள்ளிக்கூட ஒழுங்குகளுக்கு நேரில் தொடர்புகொள்ளவும்

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜயா.
மூன்று முடிச்சு
திரை கதை வசனம், டைரக்ஷன்: கே. பாலசந்தர்

ராஜா தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
[யாழ்ப்பாணம்]
ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா-சோ-விஜயகுமார்
நடித்த
மேயர் மீனாட்சி

50-வது வெற்றி நாளை நோக்கி
ராணி வி. பி. கணேஷன் — சுபாஷினி
ராம்தாஸ் — ஜெனிட்டா
(யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள் நடித்த
நான் உங்கள் தோழன்
அமரர் செல்வநாயகத்தின் இறுதியாத்திரைக்
காட்சியும் கதையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — ஜெயலலிதா
கணவன்

கொட்டகை நிறைந்த காட்சியுடன் நடைபெறுகிறது
போன் 7693
லிடோ
(யாழ்.நகர்) முத்துராமன், சிவகுமார், சுஜாதா
நடித்த
உறவு சொல்ல ஒருவன்

## தொகுதிவாரி வேலைவாய்ப்பு:

# எம். பிக்களின் நேரடி சிபாரிசு செல்லாது

[யாழ்ப்பாணம்]

எம் பி.க்களின் நேரடியான சிபாரிசுக் கடிதம் வைத்திருப்பவர்களது விண்ணப்பங்கள் நேர்முகப் பரீட்சையில் ரத்துச் செய்யப்படுமென தொகுதிக்கு 1000 பேருக்கு வேலைவழங்குவது தொடர்பாக எம். பிக்களுக்கு அரசு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. அச் சுற்றறிக்கையின் விபரம் வருமாறு:

"ஒவ்வொரு தொகுதியிலும் 1000 பேருடைய பெயர்களை எம். பி. ஒழுங்குமுறைப்படி சிபார்சுசெய்யவேண்டும். இப் பெயர்களைச் சிபார்சு செய்வதற்கென விண்ணப்பதாரிகளால் நிரப்பப்படவேண்டிய விண்ணப்பப்படிவத்தின்மாதிரி ஒன்று சகல எம். பி.களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவ் விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் குடும்ப நிலைக்கு முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. குறைந்த வருமானங்களை பெறும் குடும்பத்தில் ஒருவருக்காவது வேலை வழங்கவேண்டுமென்பது அரசின் விருப்பமாக உள்ளது இதற்காகவே விண்ணப்பதாரியின் குடும்ப அங்கத்தவர்களினதும் உழைக்கும் அங்கத்தவர்களதும் விபரங்களும்குடும்ப மாத வருமானமும் கேட்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்களின் கல்வி-தொழில் நுட்பத் தகைமைகளும் எவ்வளவு காலம் வேலையின்றி இருக்கிறார்போன்ற விபரங்களும், விரும்பும் வேலை பற்றிய விபரங்களும் விண்ணப்பத்தில் மேலும் கோரப்பட்டுள்ளது. இவ்விண்ணப்பத்தில் மூன்று பிரதிகளை ஒவ்வொரு விண்ணப்பதாரியும் நிரப்பி எம்.பி.யிடம் கையளிக்கவேண்டும்,

எம். பி பெயர்களைச் சிபார்சு செய்யும்போது விண்ணப்பதாரி 1-2-78 ல் அந்தத் தேர்தல்தொகுதியில் வசிக்கின்றாரா என உறுதிப்படுத்தவேண்டும். விண்ணப்பதாரி தனது தேர்தல் இடாப்பு எண்ணைக் குறிப்பதன்மூலமோ அல்லது கிராம சேவகரின் வசிப்பிட உறுதிப்பாட்டுச் சான்றிதழைப் பெறுவதன்மூலமோ இதனை நிரூபித்தல்வேண்டும்.

எம்.பி. வழங்கும் 1000 பெயர்கள் அடங்கிய பெயர்ப் பட்டியலின்படி விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கவென ஒரு குழு அரசாங்கத்தால் நியமிக்கப்படும். இக்குழுவில்அரசாங்க அதிபர் அல்லது அவரது தரத்தில் உள்ள வேறொரு அரச அதிகாரியும், தொழில் இலாகா அதிகாரிஒருவரும், ஒருதொழில் நுட்ப உத்தியோகத்தரும் அடங்குவர். யார் யாரை அரசு நியமித்துள்ளது என்னும் பெயர் விபரத்தை தொகுதி எம். பி, களுக்கு அரசு அறிவிக்கும். எம். பி.யால் ஒரு பிரதிநிதி நியமிக்கப்படுவர். இவர் நேர்முகப்பரீட்சையில் தலையிடவோ அல்லது இன்னாரைத் தெரிவுசெய்யும்படி வற்புறுத்தவோ முடியாது. ஆனால் நேர்முகப் பரீட்சைகளின் போது இப்பிரதிநிதிகள் பார்வையாளராக கலந்து தங்கள் ஆலோசனைகளை நேர்முகப் பரீட்சையை நடாத்தும் குழுவுக்கு வழங்கலாம்.

இவ்விதம் அரசால் நியமிக்கப்படும் குழு விண்ணப்பதாரிகளை நேர்முகப்பரீட்சைக்கு அழைத்து அவர்களின் விண்ணப்பக் கூற்றுக்களை பரிசீலனை செய்வதோடு அவர்களின் தகுதிக்கு ஏற்ப ஏ. பீ. சி. என

(8-ம் பக்கம் பார்க்க)

## நடுத்தீர்வை...

[5ம் பக்கத் தொடர்ச்சி

சிவ: ராசம்மா, நீர் நல்லா யோசனைபண்ணிப் பாரும். உம்மட புருஷன் ஐயாத்துரைக்கே தீராத நோய். அது உமக்கே தெரியும். பாவம் ஐயாத்துரை இனி உழைச்சுக் குடும்பம் நடத்த ஏலுமா?

ராச: எனக்கு நீங்கள் சொல்றது துப்பரவாக விளங்கேல.

சிவ: விளங்கேலையோ? ஒருதர் விழுந்தால் அடுத்தவர் தூக்கவேணும். உம்முடைய குடும்பப் பிணியை என்னால் தீர்க்கமுடியும். ஒவ்வொருதருக்கும் ஒவ்வொரு துன்பமுண்டு. எனக்குப் பணப்பசியெண்டு நீர் நினைப்பீர். அது தீர்கிற பசி. ஆனால், தீராத பசியொண்டிருக்கு உமது கஷ்டத்தைப் போக்க எனக்கு வழியும் தெரியும். நீர் விரும்பினால் செய்யலாம்.

ராச: (சினப்பாக) என்ன சிவலிங்கமணே, மறுக்கா ஏதோ கதைக்கிறியள்? எனக்கு ஒண்டுமாப் புடிபடேல்ல.

சிவ: புடிபடேலையோ? அதுவும் நல்லதுதான். தெரிஞ்சு செய்யிறதிலும் பார்க்க தெரியாமல் செய்யிறதுதான் நல்லது. நான் ஒரு 'வியளம்' கேக்கிறன். 'சட்'டென்று திறந்து சொல்றீரே?

ராச: ம்... சரி கேளுங்கோவன்.

சிவ: உமது பசி பிணியை நான் கவனிக்கிறன். நீர் அது போல, என்னையும் கவனித்தால் என்ன?

ராச: (கோபமாக) ஆ... சிக்... தூ... மறுபடியும் கிலிச கெட்ட கதையா?

சிவ: [அடக்கக் குரலில் - மூர்க்கமாக] சூ... ராசம்மா மூச்சுக்காட்டாதே' காட்டினியெண்டால்...

[தட்டுமுட்டுச் சாமான்கள் புரண்டுருளும் ஒலி]

ராச: (ஆவேசமாக) டேய் சிவலிங்கம்... விடடா என்ர சட்டைக் கையை. [கமறுதல்-குமுறுதல் - அனுங்குதல் -முனகுதல்] டேய், வடுவா... என்ன நினைச்சுக்கொண்டு வந்தனி... பொறுக்கித்தின்னி.

ரஞ்! [தூர நின்றுவந்தபடி] அம்மா... அம்மா... என்னவை சத்தம்... கதவைத் துறவணையம்மா...

ராச: (சத்தமாக) புள்ள ரஞ்சிதம், அந்த விளக்குமாத்தை எடுத்தாம்மா. [கேருந்தொனியில்] டேய், தட்டுவாணி, கள்ளமா ஓடுறியே? போடா போ... உனக்கு இனி ஒரு பாடம் படிப்பிச்சுக்காட்டுறன்... ம்... எழிய ராஸ்கல்...

ரஞ்; [ஏக்கமாக] அம்மா சிவலிங்க மாமா ஏனணை உப்பிடி ஓடுறார்? உதென்னணை. உங்கட விறுத்தம்?

ராச: (நிர்வினியாக) புள்ள ரஞ்சிதம். உந்த அரிசிசாமானை தெருவில கொண்டு போய் அவன்ர முதத்தில எறிஞ்சிட்டு வா...

ரஞ்: ஏனணையம்மா இப்ப இப்பிடிச் சொல்றீங்க?

ராச; எல்லாம் பிறகு சொல்றன். ஓடிப்போய் எறிஞ்சிட்டு வாம்மா.

ரஞ்: ஏனம்மா அவர் ஓடுறார்? ஏனம்மா ஒண்டும் பேசாமல் அழுறீங்க? ஏனம்மா சட்டையெல்லாம் கிழிஞ்சிருக்கு? அவர் ஏதும் செய்தவரோ?

ராச: [பெருங்குரலில் பிரலாபித்து] நான் பெத்த என் செல்வம்... அப்பிடியொண்டும் இல்லையடி... [கேழுந்தொனியில் அழுதல்] [வரும்]

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30 9-45,
சனி, ஞாயிறு 2-30
பேசும்தெய்வம்

நாகம்ஸ்
[சுன்னாகம்]
தினசரி: 6-45, 10-00
எஸ்.எஸ்.ஆர்.-விஜயகுமாரி
சாரதா

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு: 2-30,
சிவாஜி — பத்மபிரியா
வைரநெஞ்சம்

## பிரெஞ்சு....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

எங்களைக் காக்கவேண்டும். ஆங்கிலப்படைகள் ஊர்ப்புறத்தில் நிற்கின்றன. பிரெஞ்சுக்காரர்கள் சும்மா இருக்கிறார்கள்.

(முற்றுகையிட்ட ஆங்கிலேயர்கள் பாண்டிச்சேரிக்குள் நுழையாமல் திரும்பி விட்டனர். கப்பல்களும் போய்விட்டன.)

### 14-10-1754 திங்கள் ஐப்பசி 1. பவ வருடம்

புது கவர்னர் கோதேபழைய கவர்னர் எத்தனை மணிக்குப் புறப்படுகிறார் என்று கேட்கச் சொன்னார். நான் டியூப்ளேயைப்பார்த்தேன். பதின்மூன்று வருடமாக என்னிடம் அன்பைக் காண்பித்தீர்கள். இனிமேலும் என் மீது அன்பாக இருங்கள் என்றேன். ஆகட்டும் என்றார்.

### 15-10-1754 செவ்வாய் ஐப்பசி 2. பவ வருடம்

டியூப்ளே ஏறிய கப்பல் புறப்பட்டது. அதைப்பார்க்க நான் அதிகாலையில் சென்றேன். வேலையிலிருந்து நீக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டு டியூப்ளே போகிறார். நன்மை செய்தவர்கள் தான் வாழ்வார்கள்என்று வேதங்கள் சொல்கின்றன. டியூப்ளே சரியான முறையில் அரசாளவில்லை. மனைவியின் பேச்சைக்கேட்டார். பெண் பேச்சைக் கேட்பவர்கள் அழிவார்கள் என்று சப்தசாஸ்திரங்கள் சொல்கின்றன. பன்னிரண்டு வருஷங்கள் ஒன்பது மாதங்களுக்கு முன் இங்கே வந்தார் அவர். என் உதவியால் லக்ஷம்லக்ஷமாக. சம்பாதித்தார். என்னைப் பற்றி அவர் கவலைப்படவேயில்லை. நான் கடனில் மூழ்கி இருக்கிறேன்.

ஆனந்தரங்கப்பிள்ளை 51 வயதுவரை வாழ்ந்தார். தமது கடைசிக்காலத்தில் அவர் நிம்மதியாக வாழவில்லை. வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டது. பல கவர்னர்களிடம் வேலைபார்த்த ஆனந்தரங்கப்பிள்ளை தமதுகண் எதிரிலேயே பிரெஞ்சு ஆட்சி அழிவதை உணர்ந்தார். ஆங்கிலேயர்கள் மீண்டும் பாண்டிச்சேரி மீது படையெடுத்தனர். அவரே ஊரைவிட்டு ஓடும்நிலை.ஆனால் நடந்தது என்ன? அவர் ஊரை விட்டுச் செல்வதற்கு முன் 1761 ஜனவரி 12ம் திகதி மரணமடைந்தார். அவர் இறந்த நான்கு நாட்களில் பாண்டிச்சேரியின் வழுதாவூர் வாசலில் ஆங்கிலக்கொடி பறந்தது: பாண்டிச்சேரியில் நுழைந்த ஆங்கிலேயர் அதை சின்னாபின்னமாக்கினர். இதையெல்லாம் கண்ணால் பார்க்காமலேயே ஆனந்தரங்கப்பிள்ளை மறைந்துவிட்டார். ஆனால் அவரது டயரி சரித்திரத்தில் இடம்பெற்று மறையாது நின்று நிலவுகிறது.

# தமிழர் கூட்டணிக்கு தமிழ்பொலிசார் நிதிஉதவி அளிக்கின்றனர்

## யாழ். பொலிஸ் நிலைய வகுப்பில் டி. ஐ. ஜி. இப்படிக் கூறினாராம்

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

கொடுத்தார்கள். ஆனால் தமிழ் பொலிஸாரை வெளியினில் அனுப்பவில்லை. பொலிஸ் நிலையத்திலேயே வைத்திருந்தனர். மத்தியானம், பின்னேரம், தமிழ் பொலிசாருக்கும் துப்பாக்கி வழங்கப்பட்டது.

சட்டத்தரணி: இலங்கையில் எந்தெந்த பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றியிருக்கிறீர்,-இலங்கையில், முக்கால் பகுதி பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றியிருக்கிறேன்.

சட்டத்தரணி: பொலிஸாருக்கு எப்படி துப்பாக்கி வழங்குவது? துப்பாக்கி வழங்கும் பிரிவில்,ஒரு இன்ஸ்பெக்டரும், சார்ஜன்டும், பொறுப்பாக இருப்பார்கள், குறிப்பிட்ட பழக்கப்பட்ட பொலிஸாருக்கு மட்டுமே துப்பாக்கி வழங்கப்படும்.

சட்டத்தரணி: அதற்கு இன்ஸ்பெக்டரும் பொறுப்பாக இருப்பார்?. ஆம்.

சட்டத்தரணி: எப்படி கொடுப்பார்கள்? றைபிள் நம்பரும், கான்ஸ்டபிள் விபரமும் எழுதப்படும்.

சட்டத்தரணி: துவக்கு பெறும் பொலிஸாரின் நம்பர் எழுதப்படுமா? ஆம்.

சட்டத்தரணி: பொலிஸ் ஆயுதப்பிரிவுக்கு, எப்படி நடக்கவேண்டும் என முன்னரே விபரிக்கப்பட்டுள்ளது? ஆம் ஆனல் 16ம் தேதி பொலிஸார் தங்களுக்கு தெரிவித்தபடி, நடக்கவில்லை. தாங்கள் விரும்பியபடி, றைபிள்களை எடுத்துக்கொண்டனர்.

சட்டத்தரணி: இதுபற்றி தகவல் புத்தகத்திலும் எழுத வேண்டும்? ஆம். அதற்கு ஒருவர் பொறுப்பாக இருப்பார்,

15ம் தேதி கோட்டைக்குள் பொலிஸ் அதிபர் செனவிரத்தினவின் இல்லத்தில் இரவு 10மணிக்கு ஒரு ரகசிய மாநாடு நடந்ததாக அறிந்தேன். இம் மாநாட்டில் சப் இன்ஸ்பெக்டர் வால்ட்டர் பெரேரா, அலோசியஸ் ஜெயவர்த்தன,ஜயசேகரா ஆரியதாசா.பி. றெஜினேல்ட் வீரதுங்க, ராஜபக்ச ஆகியோர் கலந்துகொண்டதாகவும் அறிந்தேன்.

### புங்குடுதீவுக்குப் போவதாகக்கூறி பழைய மார்க்கட்டுக்குத் தீவைத்தனர்

அதன்பின் இவர்கள் நள்ளிரவு, புங்குடுதீவுக்கு முக்கிய அலுவலாக, ரோந்து சுற்றி செல்வதாக, பதிந்துவிட்டு போனர்கள். இவர்கள்போய் யாழ்ப்பாணம், பழைய மார்க்கட் பாய்க்கடைக்கு நள்ளிரவு 1-30மணிக்கு தீவைத்து கொழுத்தியதாகவும் அறிந்தேன்.

நான் விசேஷ துப்புத்துலக்கும் பிரிவில் கடமையாற்றுவதால், பிரிவுமுழுவதும் எனக்கு தெரிந்திருந்தது அந்த நாட்களில் நான் சிற்றிபேக்கரிக்கு பாண்வாங்கபோனேன்

### சிற்றிபேக்கரிக்கு முன்அறிவிப்பு

3 நாட்களுக்கு 16ம், 17ம், 18ம் தேதிகளில் பாண் போட வேண்டாமென பொலிசார் அறிவித்திருப்பதாக பேக்கரிக்காரர்கள் என்னிடம் கூறினர்கள்.

13ம் தேதி அல்லது 14ம் தேதி டி ஐ ஜி அனு செனிவரத்தின ஒருவகுப் புநடத்தினர் சிங்கள, தமிழ் பொலிசார் எல்லாரும் அம்மகாநாட்டிற்கு வந்திருந்தனர் நானும் அவ்வகுப்புக்குப்போனேன்

டி. ஐ. ஜி. வந்து கதிரையில் அமர்ந்ததும் என்ன சொன்னர் தெரியுமா? இங்குள்ள தமிழ் பொலிஸார் அத்தனை பேரும் தமிழர்விடுதலைக் கூட்டணிக்கு மாதா மாதம் நிதி உதவி அளிக்கிறர்கள் என்றர்

அப்படி தமிழ் பொலிசார் நிதி உதவி எதுவும் கூட்டணிக்கு அளிக்கவில்லை.

### பொலிசாருக்கிடையில் வெறுப்பை ஏற்படுத்தும் நோக்கம்

சிங்களப் பொலிசாருக்கு, தமிழ்பொலிசார்மீது வெறுப்பு ஏற்படுத்துவதற்கே அவர் இப்படிக் கூறியிருக்கலாம்என்பதே என் அபிப்பிராயம்.

தனிப்பட்டமுறையில் தமிழ் பொலிசாரை அழைத்து இதுபற்றி அவர் கேட்டிருக்கலாம்; சி. ஐ. டி. பொலிசார்மூலம் இதுபற்றி விசாரணை நடத்தி தெரிந்திருக்கலாம். அதைவிட்டு, சிங்கள—தமிழ் பொலிசார் சேர்ந்திருக்கும் ஒரு மகாநாட்டில் பொறுப்பான பதவி வகிக்கும் ஒரு மேலதிகாரி இப்படியான வார்த்தைகளை உதிர்த்தார். சிங்கள பொலிசாருக்கு எம்மீது வெறுப்பு ஏற்படுத்தவே இப்படி அவர் கூறியிருக்கிறர்.

### கன்னாதிட்டி சம்பவம்

ஆகஸ்ட் 17ம் தேதி கன்னாதிட்டியில் நகைக்கடைக் கொள்ளை, தீவைப்பு, துப்பாக்கிச்சூடு சம்பவம் நடந்தது. இச் சம்பவம்பற்றி விசாரிக்க நானும் எஸ்.ஐ. பெரேராவும், சார்ஜன்ட் அப்பையாவும் அங்கு சென்றோம்.

## வேலை நீக்கத்தில் நின்றவர் திடீரென அங்கு தோன்றினர்

அன்றைய தினம், தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்த ரணசிங்கா என்ற கான்ஸ்டபிளும், றைபிளுடன் நின்றதை கண்டேன். வேலை நீக்கம் செய்யப்பட்டவர், பொலிஸ் நிலையத்துக்கு கடமைக்குவரமுடியாது ரணசிங்கா, அதிக நாட்களாக அங்குவராமலிருந்தார் திடீரென் 15ம் தேதி பொலிஸ் நிலையத்தில் தோன்றினர். 16ம் தேதி அவர் சிவில் உடையில் நின்றர். அவரும் றைபிளை எடுத்துக்கொண்டு ட்ரக்கில் தாவி ஏறினர்..

### அமிரை அடித்ததற்காக...

சட்டத்தரணி: அவர் எதற்காக வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்தார்? எனக்கு தெரியாது. திரு அமிர்தலிங்கத்தை அடித்த சம்பவத்திற்காக அவர் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கலாம்

ஏ. எஸ். பி நூர்தீன், பொலிஸ் நிலையத்திற்குவந்தவுடனேயே அபாயமணி அடிக்கப்பட்டது.

### தமிழரை சுட்டுவிட்டு வாருங்கள்

விருந்தையில் அவரை சுற்றிவர சர்ஜன்ட், சப் இன்ஸ்பெக்டர், பொலிஸார் நின்றர்கள். நகரத்திற்கு போய் தமிழர்களை எல்லாம் சுட்டுவிட்டு வாருங்கள் என்று நூர்தீன் கூறினர்.

தமிழர்கள் இல்லாத இலாகா என நினைத்து ஏ எஸ். பி. நூர்தின் அப்படி கூறியது எனக்கு கவலையளித்தது உடனே ஆயுதம் தாங்கிய பொலிஸார், நான் முந்தி நீ முந்தி, என ஓடோடிச் சென்று பொலிஸ் ட்ரக்கில் ஏறிக்கொண்டனர். பின் இவர்கள் சுட்டதாகவும், சிலர் கொல்லப்பட்டதாகவும் அறிந்தேன்.

## சடலத்தை இழுத்த அடையாளம்

சங்கீத மாஸ்டர் ஆறுமுகம் வீட்டில் கந்தசாமி நின்றர். அவர் நடந்த சம்பவத்தை கூறினர் சம்பவம் நடந்த இடங்களையும் சுட்டிக்காட்டினர் இனந்தெரியாத வாலிபர் சுடப்பட்டுகிடந்த இடத்தையும் காட்டினர். ஆறுமுகம் வீட்டுச் சுவரில் இரத்த அடையாளங்கள் காணப்பட்டன. நிலத்திலும் இரத்தம் காணப்பட்டது. அவர் வளவில்தான் சம்பவம் நடந்ததாக கூறினர். சடலம் ஒழுங்கைக்கு இழுக்கப்பட்டுச்சென்ற அடையாளங்களையும் காட்டினர்.

சப் இன்ஸ்பெக்டர் பெரேரா விபரங்கள் பற்றி எவ்வித குறிப்பும் எடுக்கவில்லை, சாட்சியங்களையும் பதிவுசெய்யவில்லை.

அவற்றை எழுதுமாறு நான் அவரிடம் கூறினேன் அப்பொழுது பெரேரா, இராணுவம்மீது இந்தப் பழியை சுமத்திவிடுமாறு எஸ் பி. செனவிரத்ன கூறியுள்ளதாக என்னிடம் தெரிவித்தார் பொலிசாரை அச்சம்பவத்தில் மாட்டாமல் பார்த்துக்கொள்ளுமாறு எஸ் பி செனவிரத்ன தன்னிடம் கூறியதாகவும் அவர் சொன்னர்

### நீங்கள் நம்பமாட்டீர்கள்

நானும் 35 வருடங்களாக சேவையில் ஒழுங்கு, கட்டுப்பாட்டுடன் நடந்துவந்தேன் நான் 35 வருட காலத்திலும் மதுபானம் அருந்தவில்லை நான் இதைச்சொன்னல் நீங்கள் நம்பமாட்டீர்கள்

கமிஷனர்! என்ன! - நான் மதுபானம் அருந்துவதில்லை யென சொன்னல் நம்பமாட்டீர்கள்

(சிரிப்பு)

பொலிஸ் நிலையத்தில் 24ம் தேதி ஒரு சம்பவம் நடந்தது. நானும்,நடேசன்கந்தசாமிஆகியோரும் கதைத்துக்கொண்டு நின்றோம் அப்போது. இயந்திரத்துப்பாக்கியுடன் வந்த சார்ஜன்ட் குரே 'இங்குள்ள தமிழ் பொலிசாரை எல்லாம் சுட்டுக்கொல்லவேண்டும், என கூறினர். இது பற்றி பொலிஸ் அதிபருக்கு புகார்செய்தோம் விசேட துப்புத் துலக்கும் பிரிவில், புகாரின் பதிவு செய்யப்பட்டது பொலிஸ் மா அதிபருக்கும் புகார் பிரதி அனுப்பினேம்.இன்றுவரைநடவடிக்கை எடுக்கபபடவில்லை

அந்த நேரம் நாங்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் பொறுப்பாக நடந்துகொண்டோம் பொறுமை இழந்திருந்தால் பொலிஸ் நிலையத்தில் வேலியே பயிரை மேய்ந்திருக்கும் (ஈ-இ)

## எம்பிக்களின்

[7ம் பக்கத் தொடர்ச்சி]

மூன்று வகையாக விண்ணப்பதாரிகளை நிரல்படுத்தும். ஏ' பகுதியில் அடங்கியவர்க்கே முதலில் வேலை வழங்கப்படும் பெரும்பாலும் தொகுதியிலுள்ள அரச வெற்றிடங்கள் இப்பெயர்ப் பட்டியலிலிருந்தே நிரப்பப்படும், மேலும் விண்ணப்பதாரிகளின் உயர் தகுதிகளுக்கேற்ப தேசியமட்டத்தில் வேலை வழங்கவேண்டிய விண்ணப்பங்களை இக்குழு அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வந்து தேசிய மட்டத்தில் வேலை வழங்கும்படி ஆலோசனை வழங்கும்.

நேர்முகப் பரீட்சைக் குழுவால் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளின் பெயர்கள் அரசாங்க அதிபரிடம் இருக்கும். மாவட்ட அமைச்சர்கள் நியமிக்கப்பட்ட பின் அவர்களிடமே இப்பெயர்கள் இருக்கும், அவர்களே இவ்விண்ணப்பதாரிகளுக்கு நியமனங்களை வழங்குவர்,

இனிமேல் அரசின் எந்த நேர்முகப் பரீட்சைகளில் ஆயினும் எம் பீ யின் நேரடி சிபார்சு கடிதங்களை யாராவது கொண்டு வருவார்களாயின் அவ் விண்ணப்பம் உடனடியாக ரத்துச் செய்யபடுமெனவும் இவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் தொகுதிக்கு 200 பேருக்கே முதலில் வேலைவழங்கப்படுமெனவும் ஏனையவர்களுக்கு காலக்கிரமத்தில் வேலை வழங்கப்படுமெனவும் தெரியவருகிறது. [கி]

## மரண அறிவித்தல்

### குமாரசாமி சின்னம்மா

புங்குடுதீவு பன்னிரெண்டாம் வட்டாரம் அளகாபுரி நே. மு. குமாரசாமியின் மனைவியும் காலஞ்சென்ற குளியாபிட்டி வர்த்தகர்கள் இ. க கந்தையா, க க அப்பாக்குட்டி ஆகியோரின் சகோதரியும் முல்லைத்தீவு இ போ ச சண்முகராசா, டம்பகல ஆஸ்பத்திரி டாக்டர் சண்முகரத்தினம், திருமதி ராஜேஸ்வரி திருமதி மங்கயர்க்கரசி, ஆகியோரின் தாயாரும், திருப்பூங்குடி ஆறுமுகம், மு. மாணிக்கவாசகர், திருமதி தெய்வநாயகி, திருமதி அம்பிகாதேவி, ஆகியோரின் மாமியாருமான திருமதி சின்னம்மா காலமானர் ஈமக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை காலை ஒன்பது மணிக்கு புங்குடுதீவு மணற்காடு மயானத்தில் நடைபெறும்.

நே மு குமாரசாமி
'தர்மபுரி' புங்குடுதீவு 12
3562

## 28ந் திகதி மீண்டும்விசாரணை

யாழ்ப்பாணத்தில் நேற்றுடன் கமிஷன் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் யாழ்ப்பாணத்தில் இம்மாதம் 28ம்தேதி காலை 9 30 மணிக்கு விசாரணை ஆரம்பமாகும்.

## பரதநாட்டிய அரங்கேற்றம்



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. வேதநாயகம் தம்பதிகளின் புதல்வி செல்வி அங்கயற்கண்ணியின் பரதநாட்டிய அரங்கேற்றம் இன்றுமாலை 6·30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்ப்பாண தேசியப் பேரவை உறுப்பினர் திரு வெ யோகேஸ்வரன் தலைமையில் நிகழவுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும் பாரியாரும் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளும் இந் நிகழ்ச்சியில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் ஆசியுரை வழங்குகின்றர்.

செல்வி அங்கயற்கண்ணி திருமதி லீலா ஆறுமுகையாவின் சதங்கை நர்த்தனலய மாணவியாவார். [கி]

## இன்றைய தாளவாத்திய கச்சேரி

இன்று ஞாயிறு இரவு 6 30 மணிக்கு இலங்கை வானெலியில் நடைபெறும் தாளவாத்தியக் கச்சேரியில் மிருதங்க வித்துவான் திரு வே அம்பலவாணர் மிருதங்கமும், திரு. ரி ஜெயசுந்தரா கெஞ்சிராவும், திரு கே கே அச்சுதன் கடமும் வாசிப்பார்கள்; பல்லவி வாசிப்பவர் திரு ரி வி விஜயகமூர்த்தி வயலின்,

8561

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு

டொலர் அலுமினியம்

ONE DOLLAR

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் விநாயகத்தார் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேலை வீதி 18-ம் இலக்க ஆலைய அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 339. Registered as a Newspaper in Srilanka